PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

சென்னை மலர்: 01 இதழ்: 180 11.02.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 180 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

இன்றைய நாள்

புதன்கிழமை
(11-02-2026)
விசுவாவசு ஆண்டு, தை -28
பிறை: தேய்பிறை
திதி
நவமி காலை 11.16 வரை
பிறகு தசமி
நட்சத்திரம்:
அனுஷம் நண்பகல் 12.09
வரை பிறகு கேட்டை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00-3.30 மணி
எமகண்டம்
காலை 7.30 9.00 மணி.
சூலம் - வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 4-6 மணி

மேஷம் ....நம்பிக்கை
ரிஷபம்.................... லாபம்
மிதுனம் .... நலம்
கடகம் .... மேன்மை
சிம்மம் ....சாதனை
கன்னி .... மாற்றம்
துலாம் .... உழைப்பு
விருச்சிகம்............தேர்ச்சி
தனுசு ....கீர்த்தி
மகரம் .... சிக்கனம்
கும்பம்.................... வரவு
மீனம் ....நிம்மதி

மாணவர்கள் தங்கள் ஆற்றலை வளர்க்க ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும்

பிரதமர் மோடி அறிவுரை

புதுடெல்லி, பிப்.11:

ஏஐ போன்ற நவீன தொழில்நுட்பங்களை கண்டு அஞ்சாமல் மாணவர்கள் அவற்றை தங்களின் அறிவாற்றலை பெருக்குவதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை வழங்கினார்.

குஜராத்தின் தேவமொக்ரா, தமிழகத்தின் கோயம்புத்தூர், சத்தீஸ்கரின் ராய்ப்பூர் மற்றும் அசாமின் குவாஹாட்டி உள்ளிட்ட நகரங்களில் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். அப்போது அவர் கூறியதாவது: தலைமைப் பண்பு என்பது தேர்தலில் போட்டியிடுவதோ அல்லது அரசியல் கட்சி தொடங்குவதோ அல்ல; மாறாக, தெளிவான சிந்தனையும், தகவல் தொடர்பும் அத்துடன் முதலில் தன் மீது தனக்கு இருக்கும் நம்பிக்கையுமே ஒருவரைத் தலைவராக்கும்.

தலைவராக உருவெடுக்க வேண்டும் என்றால் முதலில் உங்களை நீங்கள் நம்ப வேண்டும். எதையும் முன்னின்று நடத்தும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கருத்துக்களை மற்றவர் மீது திணிக்காமல், அவற்றை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைப்பதே மிகச் சிறந்த தலைமைப் பண்பாக அமையும். தேர்வு பயத்தைப் போக்க மாதிரி வினாத்தாள்களைத் தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள்.

அது உங்களை பதற்றமின்றி வைத்திருக்கும். அடுத்ததாக, ஆழ்ந்த உறக்கம் மிகவும் அவசியம். நல்ல உறக்கம் புதிய சிந்தனைகளையும், தெளிவான முடிவெடுக்கும் திறனையும் வழங்கும். சாதனைகளை விட முதலில் ஒரு காரியத்தைத் தொடங்குவதில் உங்கள் கவனம் இருக்கட்டும். செயற்கை நுண்ணறிவு, செல்போன் போன்ற நவீன தொழில் நுட்பங்கள் உங்களை ஆள ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.

அது உங்களுக்கு வேலை செய்யும் கருவிகளாக மட்டுமே இருக்கட்டும். அவை உங்கள் எஜமானர்களாக மாறிவிட அனுமதிக்காதீர்கள். தொழில்நுட்பத்தைக் கண்டு அஞ்சத் தேவையில்லை.

அதைக்கொண்டு நமது அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளவதில்தான் நமது திறமை அடங்கியுள்ளது. வெற்றிக்கு ஒழுக்கம்தான் அஸ்திவாரம். எவ்வளவு தான் உத்வேகம் இருந்தாலும், ஒழுக்கம் இல்லாவிட்டால் எதுவும் பயனளிக்காது.

விளையாட்டையும் கல்வியையும் சமமாகப் பாவியுங்கள். விளிம்பு நிலை மக்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த 'பிஎம்-ஜன்மன்' போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு மாணவர்களிடம் பிரதமர் மோடி உரையாடினார்.

500 மூத்த தம்பதியருக்கு தாம்பூலம் வழங்கி சிறப்பு செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, பிப்.11:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை, வேப்பேரி, பி.கே.என் ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள சென்னை மண்டல கோவில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியினருக்கு புத்தாடைகள், பழ வகைகள் மற்றும் மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார்.

2025-2026-ம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "திருக்கோவில்கள் சார்பில் 70 வயது பூர்த்தியடைந்த 2,000 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்யப்படும்" என அறிவிக்கப்பட்டதை நிறைவேற்றிடும் வகையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 10.11.2025 அன்று திருவல்லிக்கேணியில் 200 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்ததை தொடர்ந்து மாநிலம் முழுவதும் 2,000 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக கோவில்கள் சார்பில் 20,000 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்திடும் வகையில் சென்னை வேப்பேரி பி.கே. என் ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்றையதினம் 70 வயது பூர்த்தியடைந்த 500 மூத்த தம்பதியினருக்கு வேட்டி மற்றும் சட்டை, புடவை, ரவிக்கை, பழ வகைகள், மஞ்சள், குங்குமம், கண்ணாடி வளையல்கள், குங்குமசிமிழ் உள்ளிட்ட மங்கலப் பொருட்களை வழங்கி சிறப்பு செய்து தொடங்கி வைத்தார்.

இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் 3,000 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்யப்பட்டது. இவ்விழாவில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதா சல அடிகளார், சிரவை ஆதினம் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் அப்பன் உலகாரிய இராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் துரை. ரவிச்சந்திரன், ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கலைநிகழ்ச்சி ஒத்திகையில் ஈடுபட்ட அரசு பள்ளி மாணவி திடீர் மரணம்

உடலை வாங்க மறுத்து உறவினர்கள் சாலை மறியல்

திருச்செங்கோடு, பிப்.11:

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அடுத்த குமரமங்கலம் பகுதியில் ஊராட்சி ஒன்றிய அரசு தொடக்கப்பள்ளியில் 3-ம் வகுப்பு படித்து வந்த மாணவி ரக்சிதா (வயது 9) பள்ளியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்காக ஒத்திகை நிகழ்ச்சியில் தனியார் மண்டபத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவர் திடீரென மயங்கி விழுந்தார். உடனே திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு அங்கிருந்து நாமக்கல் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிக்கு மாணவி கொண்டு செல்லப்பட்டார். நேற்று சிகிச்சை பலனின்றி மாணவி இறந்தார்.

நாமக்கல்லில் அரசு மருத்துவமனையில் மாணவியின் உடல் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாணவியின் மரணத்தில் மர்மம் உள்ளது என கூறி உடலை வாங்க மறுத்து பாதிக்கப்பட்ட மாணவியின் தந்தை மாதேஸ்வரன், தாய் தனலட்சுமி மற்றும் உறவினர்கள் உள்ளிட்டோர் குடும்பத்திற்கு இழப்பீடாக ரூ. 20 லட்சம் மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என வலியுறுத்தி இன்று காலை திருச்செங்கோடு - நாமக்கல் சாலையில் உள்ள குமரமங்கலம் பஸ் நிறுத்தத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் லெனின் தலைமையிலான வருவாய் துறையினர்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். முறையாக முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உங்களது கோரிக்கையும் கொடுங்கள். அதையும் முதல்- அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர். இதனால் மாணவியின் குடும்பத்தினர் சாலை மறியலை கைவிட்டனர்.

மாணவி ரக்சிதா மயங்கி விழுவதற்கு முன்பு தன்னுடைய நெற்றியில் பூச்சி கடித்ததாக ஆசிரியரிடம் கூறியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக திருச்செங்கோடு ஊரக போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பிரதமர் மோடி இருக்கையை முற்றுகையிட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள்

புதுடெல்லி, பிப்.11:

லோக்சபாவில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பிரதமர் மோடியை "நேரடியாகத் தாக்க" திட்டமிட்டிருந்ததாக தனக்கு உறுதியான தகவல் கிடைத்ததாகச் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தெரிவித்தார்.

பிரதமரின் பாதுகாப்பு கருதியே அவரது பதிலுரை ரத்து செய்யப்பட்டதாகவும், எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்களை கேடயமாகப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்ததாக ஓம் பிர்லா தெரிவித்தார்.

பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகள் சதி செய்துள்ளதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பிரதமர் மோடியின் இருக்கைக்கு அருகே காங்கிரஸ் எம்.பி.க்கள் முற்றுகையிடும் வீடியோவை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "காங்கிரஸ் கட்சி தங்கள் எம்.பி.க்களின் மிகவும் இழிவான நடத்தையைப் பற்றி பெருமை கொள்கிறது. நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும்புனிதத்தையும் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

மணிப்பூரில் மீண்டும் கலவரம்: வீடுகளுக்கு தீ வைப்பு

இம்பால், பிப்.11:

மணிப்பூரின் உக்ருல் மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட வன்முறையில் வீடுகளும் அரசு குடியிருப்புகளும் தீவைத்து எரிக்கப்பட்டன. வன்முறை காரணமாக பலர் அப்பகுதியை விட்டு வெளியேறினர்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் ஓராண்டு கால குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பிறகு முதல்வர் யும்னம் கெம்சந்த் சிங் தலைமையில் புதிய அரசு கடந்த 4-ம் தேதி பதவியேற்றது. எனினும் மாநிலத்தில் மறுநாளே வன்முறை வெடித்தது. குகி சமூகத்தினர் அதிகம் வசிக்கும் சுராசந்த்பூர் மாவட்டம் முழுவதும் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்நிலையில் மணிப்பூரின் உக்ருல் மாவட்டம் லிட்டன் பஜார் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வன்முறை வெடித்தது. இதில் பல வீடுகளுக்கு வன்முறை கும்பல் தீ வைத்தது. இதையடுத்து அருகருகே உள்ள லிட்டன், மாங்கோட் கிராமங்களில் டாங்குல் நாகா மற்றும் குகி சமூகத்தினர் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட வன்முறையில் 25 வீடுகளும் 4 அரசு குடியிருப்புகளும் தீ வைத்து எரிக்கப்பட்டன. வன்முறை மோதல்களை தொடர்ந்து பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குகி சமூகத்தை சேர்ந்த சைக்கூல் எம்எல்ஏ கிம்னியோ ஹாவ்கிப், டாங்குல் நாகா சமூகத்தைச் சேர்ந்த உக்ருல் எம்எல்ஏ ராம் முய்வா ஆகிய இருவரும் நேற்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

சாலையில் படுத்து மாற்றுத்திறனாளிகள் போராட்டம்

திண்டுக்கல், பிப்.11:

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையை உயர்த்தி வழங்க கோரி மாநிலம் முழுவதும் தொடர் சாலை மறியல் போராட்டம்நடத்தப்போவதாக அறிவித்திருந்தனர். அதன்படி, திண்டுக்கல்லில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைக்கான சங்கம் சார்பில் திண்டுக்கல் பஸ் நிலையம் அருகே உள்ள மாவட்ட கலெக்டர் முகாம் அலுவலகத்தின் எதிரில் உள்ள சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் தமிழக அரசு தற்போது வருவாய் துறை மூலமாக சாதாரண ஊனமுற்றோர் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1500யும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக கடும் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2000யும் உதவித்தொகையாக வழங்கி வருகிறது. தற்போது உள்ள விலைவாசி உயர்விற்கு ஏற்றார் போல் இல்லாத காரணத்தினால் மாற்றுத்திறனாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக ஆந்திராவில் சாதாரண ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 6000யும், கடும் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.10000யும், படுத்த படுக்கையாக உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15000 உதவித்தொகையாக வழங்கி வருகின்றனர்.

இதேபோல் பாண்டிச்சேரியில் ரூ.5800யும், தெலுங்கானாவில் ரூ.4016யும், டெல்லியில் ரூ.5000யும் வழங்கி வரும் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் அதிகபட்சமாக ரூ.2000 மட்டுமே வழங்கி வருகின்றனர். எனவே ஆந்திர மாநிலத்தில் வழங்குவதை போன்று தமிழகத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை உயர்த்தி வழங்க வேண்டும் என கூறி மறியல் போராட்டம் நடத்தினர்.

சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள் 300க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்தனர்.

5 ஆண்டுகளில் பல குடும்பங்களின் தலையெழுத்தை தி.மு.க. அரசு மாற்றி உள்ளது - மு.க.ஸ்டாலின்

சென்னை, பிப்.11:
சென்னைநுங்கம்பாக்கத்தில் உள்ள மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெறும் பாராட்டு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* பள்ளிக்கல்வியில் 19 லட்சத்திற்கும் மேலான மாணவர்கள் காலை உணவு திட்டத்தால்பயன்பெறுகின்றனர்.

* 8 லட்சம் மாணவிகள் புதுமை பெண்கள் திட்டத்தில் பலன் பெற்றுள்ளனர்.

* தி.மு.க. அரசு கொண்டு வந்த மாடல் பள்ளிகளால் ஐ.ஐ.டி.யில் மாணவிகள் பயில்கின்றனர்.

* கடந்த 5 ஆண்டுகளில் அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்விக்கு சென்ற மாணவர்களின் கல்விச்செலவை அரசே ஏற்றுள்ளது.

* 5 ஆண்டுகளில் பல குடும்பங்களின் தலையெழுத்தை தி.மு.க. அரசு மாற்றி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

"தேர்தல் ஆணையத்தை என்ன விலை கொடுத்து வாங்கினார்கள் என தெரியவில்லை" - பா.ம.க. எம்.எல்.ஏ அருள்

சென்னை, பிப்.11:
அங்கீகாரம் இல்லாத பதிவு செய்யப்பட்ட கட்சி பா.ம.க கஷ்டப்பட்டு இந்த இயக்கத்தை உருவாக்கிய ராமதாஸை ஒரேநாளில் தூக்கி எறிய பார்த்தார்கள்.

பாமகவின் அதிகாரப்பூர்வ தலைவராக அன்புமணி ராமதாஸை இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது. இது தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில், தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு எந்தத் தடையும் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த ராமதாஸ் தரப்பு எம்.எல்.ஏ அருள், 'தேர்தல் ஆணையத்தை என்ன விலை கொடுத்து வாங்கினார்கள்' என தெரியவில்லை என அன்புமணி தரப்பை குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக பேசிய அவர்,

"அங்கீகாரம் இல்லாத பதிவு செய்யப்பட்ட கட்சி பா.ம.க. அக்கட்சியின் உள்விவகாரங்களில் நாங்கள் தலையிட முடியாது" என தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது. ஆனால் இப்போது இப்போது இந்த வாதத்தை மாற்றிக்கொள்கிறோம் என தேர்தல் ஆணையமே ஒரு மறுசீராய்வு மனுவை தாக்கல் செய்கிறது. அதற்கு நீதிமன்றம் மாற்றமாட்டோம், பதிவு செய்துகொள்கிறோம் என கூறுகிறது.

தற்போது தேர்தல் ஆணையத்தை இவர்கள் என்ன விலை கொடுத்து வாங்கினார்கள் என்று தெரியவில்லை. அதன்மூலம் ஒரு பொய்யான அறிக்கையை சமர்பிக்கிறார்கள். மறுசீராய்வு மனு என்பது 30 நாட்களுக்குள் தாக்கல்செய்ய வேண்டும். ஆனால் 72 நாட்கள் கழித்து தேர்தல் ஆணையம் போடுகிறது. இதன் உள்நோக்கம் எங்களுக்கு தெரியவில்லை. கஷ்டப்பட்டு இந்த இயக்கத்தை உருவாக்கிய ராமதாஸை ஒரேநாளில் தூக்கி எறிய பார்த்தார்கள். அதற்கு நீதிபதி அனுமதி தரவில்லை. நீதிமன்றத்தை விலைக்கு வாங்கமுடியவில்லை. ஆனால் தேர்தல் ஆணையத்தை வாங்கியுள்ளனர்." என தெரிவித்தார்.

சென்னையில் ஆட்டோ, கால்டாக்சி டிரைவர்கள் வேலை நிறுத்தம்

சென்னை, பிப்.1:
தமிழ்நாடு ஆட்டோ-கால் டாக்சி ஓட்டுனர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வேலை நிறுத்த போராட்டம் நேற்று நடைபெற்றது.

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்த வேண்டும், டூரிஸ்ட் கேப், மேக்ஸி கேப் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஜிபிஎஸ் கருவியை அரசு செலவில் பொருத்த வேண்டும், ஓலா, உபர், ராபிடோ, போர்ட்டர் போன்ற வாகனங்களை அக்ரிகேட்டர் சட்டத்தின் கீழ் முறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தம் நடந்தது.

விழிப்புணர்வு பேரணி

விழுப்புரம், பிப்.11:
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி... மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான உள்ளடக்கிய கல்வி திட்டத்தின் கீழ்...12.02.2026 அன்று நடைபெற இருக்கும் மருத்துவ முகாம் குறித்த விழிப்புணர்வு பேரணி காணையில் நடைபெற்றது...

காணை வட்டார கல்வி அலுவலர்கள் குணசேகரன்.. தேன்மொழி ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர்...

அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில் குமார்... வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஆரோக்கிய அனிதா ஆகியோர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினர்...

காணை முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில். மாற்றுத்திறனாளி மாணவர்களை பள்ளியில் சேர்ப்போம்...

கல்வி கற்பதற்கு மாற்றுத் திறன் தன்மை... தடையல்ல...

இணைவோம்... மகிழ்வோம்... போன்ற முழக்கங்களை எழுப்பியவாறு.. அரசு மேல்நிலைப்பள்ளி பள்ளி மாணவர்கள் சென்றனர்... பேரணியில் வட்டார ஒருங்கிணைப்பாளர்.. இவாஞ்சலின் கவிதா... ஆசிரிய பயிற்றுனர்கள் ஆசிரியர்கள்... சிறப்பு பயிற்றுனர்கள் லியோனி விஜயலட்சுமி சரண்யா பரமேஸ்வரி.. பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்..

கேரளாவில் 29 கோவில்களில் ஈஷா மஹாசிவராத்திரி விழா நேரலை: ஏற்பாடுகள் தீவிரம்

திருவனந்தபுரம், பிப்.11:
கேரளாவில் உள்ள 29 முக்கிய கோவில்களில் ஈஷா மஹாசிவராத்திரி விழா நேரலை செய்யப்பட்டு கொண்டாடப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கேரள மாநிலத்தில் இருக்கும் ஈஷா தன்னார்வலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கோவை ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள ஆதியோகி வளாகத்தில், வரும் பிப்ரவரி 15-ஆம் தேதி, சத்குருவின் முன்னிலையில் நடைபெறும் பிரம்மாண்டமான மஹாசிவராத்திரி விழாவில் கேரள மாநில மக்களும் பங்கேற்கும் வகையில், கேரள மாநிலம் முழுவதும் உள்ள 29 கோயில்களில் இவ்விழா நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது. இதில் குறிப்பாக 12 கோயில்களில் பங்கேற்பாளர்களுக்கு 'ருத்ராட்ச தீட்சை' வழங்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஆதியோகி முன்பு நடைபெறும் இந்த மஹாசிவராத்திரி விழா, உலகிலேயே அதிக மக்களால் நேரலையில் பார்க்கப்படும் மிகப்பெரிய ஆன்மீக நிகழ்வுகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. சுமார் 24 மொழிகளில், 100-க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் இணையதளங்கள் வழியாக 14 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்த விழாவைக் காண்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த மஹாசிவராத்திரி நாள் இரவில் மஹாமந்திர உச்சாடனம் மற்றும் சக்திவாய்ந்த தியானங்களை சத்குரு வழிநடத்த உள்ளார். இதனுடன் மக்களை இரவு முழுவதும் விழிப்புணர்வுடன் வைத்துக் கொள்ள உதவும் வகையில் பாரத பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது.

கேரளாவில் உள்ள பக்தர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தங்களுக்கு அருகிலுள்ள கோயில்களிலேயே திரளாகக் கூடி, அந்தப் புனிதமான இரவின் ஆற்றலை நேரடியாக அனுபவிக்க ஈஷா தன்னார்வலர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஈரோடு ரிங் ரோடு அருகே பெண் கொலை- போலீசார் விசாரணை

ஈரோடு, பிப்.11:
ஈரோடு -சென்னிமலை ரோட்டில் இருந்து திண்டல் செல்லும் ரிங் ரோட்டில் ரெயில்வே பாலம் பகுதி உள்ளது. இந்த பகுதி ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியாகும்.

இந்நிலையில் நேற்று காலை இந்த பகுதி வழியாக பால்காரர் ஒருவர் சென்று உள்ளார். அப்போது ரெயில்வே பாலம் அருகே காலி இடத்தில் பெண் ஒருவர் தலையில் கல்லை போட்ட நிலையில் நிர்வாண நிலையில் இறந்து கிடந்துள்ளார்.

இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த நபர் இதுகுறித்து ஈரோடு தாலுகா போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு தாலுகா போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். கொலை செய்யப்பட்டு கிடந்த பெண்ணிற்கு 30 முதல் 35 வயது இருக்கும். அவரது உடல் அருகே சிகப்பு கலர் சுடிதார் இருந்தது. மேலும் கல் ஒன்றும் இருந்தது. அந்தக் கல்லை மீட்ட போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர்.

பெண் நிர்வாண நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்ததால் அவர் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டாரா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெண் தலையில் கல்லை போட்டு கொலை செய்யப் பட்டதால் அவரது முகம் சிதைந்து இருந்தது. இதனால் அவரை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்டது.

மேலும் ரத்தம் உறைந்து காணப்படுவதால் கொலை நடந்து ஒரு நாட்கள் மேலிருக்கும் என போலீசார் தெரிவித்தனர். அந்தப் பெண் உடல் அருகே சிகரெட்டுகள் இருந்தன.

ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் அந்த பெண் எதற்காக வந்தார் என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா, டவுன் டிஎஸ்பி முத்துக்குமரன் மற்றும் போலீசார் வந்து பார்வையிட்டனர்.

மேலும் மோப்பநாய், தடவியல் நிபுணர்களும் சம்பவ இடத்திற்கு வந்து தடயங்களை சேகரித்தனர்.

இதுகுறித்து ஈரோடு தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி. டி.வி கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும் அருகே உள்ள போலீஸ் நிலையங்களில் யாராவது பெண் மாயமாகி உள்ளாரா என்று புகார் வந்துள்ளதா என்பது குறித்தும் விவரங்களை சேகரித்து வருகின்றனர்.

கேர்மாளம் அருகே

மக்காச்சோள கதிர்களை சேதப்படுத்திய காட்டு யானைகள் கூட்டம்

தாளவாடி, பிப்.11:
ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வனப்பகுதியில் யானை, புலி, சிறுத்தை, மான், கரடி, காட்டெருமை உள்ளிட்ட பல்வேறு வன விலங்குகள் வசித்து வருகின்றன.

கடந்த சில நாட்களாகவே வனப்பகுதியில் இருந்து வெளியேறும் காட்டு யானைகள் வனப்பகுதியை ஒட்டியுள்ள விளை நிலங்களுக்குள் புகுந்து விவசாயிகள் பயிரிட்டுள்ள பயிர்களை தின்பதும், மிதிப்பதும் என சேதப்படுத்தி வருகின்றன.

2 தினங்களுக்கு முன்பு தாளவாடி மலைப்பகுதியில் யானைகள் மிதித்து விவசாயி பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் ஆசனூர் வனக்கோட்டம் கேர்மாளம் வனச்சரகத்திற்கு உட்பட்ட பூத்தாளபுரம் கிராமத்தில் ரத்தினம்மா என்பவர் விளை நிலத்தில் மக்காச்சோளம் பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்.

நேற்று அதிகாலை வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டு யானைகள் கூட்டம் விவசாயி ரத்தினம்மா தோட்டத்திற்குள் புகுந்தன. அறுவடை செய்து வைத்திருந்த மக்காச்சோள கதிர்களை யானை கூட்டங்கள் தின்றும் மிதித்தும் சேதப்படுத்தியது.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தோட்டத்திற்குள் இருந்த யானை கூட்டம் மக்காச்சோள கதிர்களை சேதப்படுத்தின.இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து கூச்சலிட்டும், பட்டாசு வெடித்தும் யானைகளை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். நீண்ட போராட்டத்துக்குப் பிறகு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

தனது நீண்டகால விவசாய உழைப்பில் அறுவடை செய்து வைத்திருந்த மக்காச்சோள கதிர்களை யானைகள் தின்றுவிட்டு சென்றதால் விவசாயி ரத்தினம்மா மிகவும் வேதனை அடைந்தார்.

கேர்மாளம் வனச்சரக அலுவலகத்திற்கு யானைகள் அட்டகாசம் செய்வது குறித்து புகாரளித்தால் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு மேற்கொள்வதில்லை, மேலும் யானைகளின் அட்டகாசங்கள் குறித்து தொலை பேசியில் தொடர்பு கொண்டு கூறினால் அலட்சியமாக பதில் அளிக்கின்றனர்.

வனத்துறையினரின் அலட்சியப் போக்கால் மலை கிராம மக்கள் மிகவும் அச்சமடைந்து உள்ளோம்.

எனவே வனத்துறையினர் இரவு நேர ரோந்து பணியில் ஈடுபட வேண்டுமெனவும், கிராமத்தை ஒட்டி அகழிகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட விவசாயி ரத்தினம்மாவுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றனர்.

திருப்புவனம் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம்

பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் வழங்கினார்

சிவகங்கை, பிப்11:
சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் விழா நடைபெற்றது75 தூய்மை பணியாளர்களுக்கு பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன் உணவுகளை வழங்கினார் . துணைத்தலைவர் ரகமத்துல்லா கான் முன்னிலை வைத்தார் செயல் அலுவலர் கவிதா அனைவரையும் வரவேற்றார். கலந்து கொண்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். வேல்பாண்டி. மாரிதாசன். சித்ராதேவி ஆறுமுகம். பத்மாவதி முத்துக்குமார். ராமலட்சுமி பாலகிருஷ்ணன். கமிதா பானு ஷேக் முகமது. மற்றும் துப்புரவு ஆய்வாளர் பாண்டியன். துப்புரவு மேற்பார்வையாளர் பான்டி. ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வாடிப்பட்டி பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம்

வாடிப்பட்டி, பிப்.11:
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சியில் தமிழக முதல்வர் மு. க.ஸ்டாலின் உத்தரவின் படி பேரூராட்சி தூய்மை பணியாளர் களுக்கு உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தை நேற்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் திருவள்ளூரில் தொடங்கி வைத்தார்.அதன்படி வாடிப்பட்டி பேரூராட்சியில் பேரூராட்சி தலைவர் மு பால்பாண்டியன் தலைமை தாங்கி தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கினார். இதில் செயல் அலுவலர் ஜெயலட்சுமி துணைத் தலைவர் கார்த்திக் முன்னாள் பேரூராட்சி தலைவர் கிருஷ்ணவேணி கவுன்சிலர் ஜெயகாந்தன், இளநிலை உதவியாளர்கள் தனலட்சுமி கார்த்திக், சுந்தர்ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் சுகாதாரப் பணி மேற்பார்வை யாளர் சுரேஷ் நன்றி கூறினார்.

பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு புத்தக பரிசுகள்

வந்தவாசி, பிப் 11:
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (வடக்கு) மாணவர்களுக்கான கற்றல் திறன் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் பள்ளி நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை வி.சுகன்யா தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, மாணவர்களுக்கு அடிப்படை திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை எளிய முறையில் விளக்கினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளி நூலகத்திற்கு தேசத் தலைவர்கள் புத்தகங்களும் வழங்கப்பட்டது. இறுதியில் பள்ளி ஆசிரியை தவமணி நன்றி கூறினார்.

பா. சீனிவாசன், வந்தவாசி.

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009

FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

கவிதை அரங்கம்!

கடினமாக உழைத்தும்
சோர்வு தெரியவில்லையா
அதுதான் உனக்குப்
பிடித்த வேலை

கனவு நிறைவேறும்
வரை முயற்சியை
கலைத்து விடாதே
ஏனெனில் முயற்சி
மட்டுமே நம்மை
முன்னேற்றி முதலிடமாகும்

உறுதி குலைந்தவனுக்கு
ஒரு படையே இருந்தும்
பயனில்லை உறுதி
கொண்டவனுக்கு கையில்
ஒரு வாளே போதுமானது

உன்னைத் தவிர நீ
வெற்றியடைவதை
வேறு யவராலும்
தடுக்க முடியாது

வாழ்க்கை தத்துவம்...

காலம் கற்றுக் கொடுக்கும் பாடமே
வாழ்வின் சிறந்த ஆசிரியர்

ஓடிக்கொண்டிருக்கும் காலத்தை
நிறுத்த முடியாது
ஆனால் அதில் சிறந்த தடத்தை
விட்டுச் செல்ல முடியும்

சிரிப்பை பகிர்ந்தால் சுமை குறையும்
சோகத்தை பகிர்ந்தால் இதயம் லேசாகும்

ஓடும் நேரத்தை
பிடிக்க முடியாது
ஆனால் அதனுடன்
ஓடிக்கொண்டே வாழ முடியும்

வாழ்வின் மதிப்பு
எத்தனை நாள் வாழ்கிறோம்
என்பதில் இல்லை
எவ்வளவு ஆழமாக
வாழ்கிறோம் என்பதில் உள்ளது

ஞான சக்தி....

ஊரைத் தாண்டி காய்கறி சந்தைக்கு அருகே இருந்த கிளை நூலகத்தின் முன் வாசலில் நின்று உள்ளே எட்டிப் பார்த்தாள். குணவதி

வயதானவர்கள் பேப்பரும், மாணவர்கள் புத்தகமும் இளைஞர்கள் குறிப்பும் எடுத்துக் கொண்டு இருந்தனர் யாரிடமிருந்து எந்த சப்தமும் வரவில்லை நூலக அறை எங்கும் அமைதியான சூழலே நிறைந்திருந்ததைக் கவனித்தாள். குணவதி

வாசலில் இருப்பது யாரெனப் பார்த்த நூலகர் சரவணன் "வா பாப்பா வா யாரைப் பார்க்கனும் எனக் கேட்டபடி கையை அசைத்து அழைத்தார். மெதுவாக காலடி எடுத்து அச்சத்துடன் மெதுவா அவருக்கருகில் வந்தாள், "உனக்கு என்ன வேணும்"என கேட்டார்.

"நா படிக்கனும்"

இது பள்ளிக்கூடம் இல்லையே பாப்பா"

நூலக அரங்கில் படித்துக் கொண்டிருந்த ஒருசிலர் திரும்பி பார்த்தனர்

"பள்ளிக்கூடம் இல்லையெனத் தெரியும் "

இது இது அறிஞர்களின் அறிவுப் பொக்கிசம் நிறைந்த நூல் பசுமை வனம் இதில் நானும் பகிர்ந்திடலாம் என வந்து இருக்கிறேன் " என்று குணவதி சொன்னதைக் கேட்ட நூலகர் வியப்பு மேலிடப் பார்த்தார் எங்கே படிக்கிறீங்க எங்கிருந்து வர்றீங்க விளையாட வேண்டிய வயசுல படிக்கனும்னு நினைக்கிறிங்க" என்றார்

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்றாள் குணவதி

"ஆகா... அற்புதம்... உன் நா உச்சரிப்பில் கேட்க ஆனந்தமா இருக்கு பாப்பா"

"இத யார் பாப்பா சொன்னதுன்னு தெரியுமா"

"பள்ளிக்கூட வாத்தியார் சொன்னாரு"

சிரித்தார் நூலகர்

"வாத்தியார் தெரிந்ததைச் சொல்லி இருக்கிறார் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" ன்னு குமரகுருபரர் சொன்னார் பாப்பா"

"உங்களைப் போல உள்ளவங்களுக்கு தெரியுது எனக்கு பள்ளிப்பாடங்களைத் தவிர வேற தகவல் எப்படி தெரிஞ்சுக்கிறது நூலகத்திற்கு வந்தாதானே தெரிஞ்சுக்க முடியும்"

"ஆமா..கண்டிப்பா... நூலகத்தில் வந்து புத்தகங்கள் படிச்சாத் தான் தெரிஞ்சுக்க முடியும் சரி உன் பெயரென்ன சொல்லலையே பாப்பா"

"ஆமா...என் பெயர் குணவதி அப்பா பெயர் அய்யனார்... அம்மா பெயர் அய்யம்மா நாங்க ஆத்தோரமா உள்ள தடுப்பு சுவர் ஓரமா குடிசை கட்டி இருக்கோம் அம்மாவும் அப்பாவும் சுகாதார பணியாளராக வேலை பார்க்கிறாங்க , நா அரசு நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கிறேன் அதனாலே நா நூலகத்துல படிக்க அனுமதிப்பிங்களா.."

எல்லோரும் படிக்கலாம் காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணிவரை படிக்கலாம் ஆனா பள்ளிப்பாடங்களை முதலில் படித்தபின் தான் இங்கே வரனும் சரியா.."

"சரிங்க சார்..."

சாருன்னு சொல்லக் கூடாது அழகாக தமிழ் மொழியில் அய்யா"ன்னு சொல்லனும் ஆங்கில மொழி படிப்பதற்கு மட்டும் தான் அழைப்பதெல்லாம் அம்மா அப்பா ஆசான் குரு என்றுதான் சொல்லனும் சரியா"

"சரி இங்கே என்ன புத்தகம் படிக்கனும்ன்னு விரும்புகிற" என்றார்

"உலகப் பொது மறையாம் திருவள்ளுவர் படைத்த திருக்குறள் அணைத்தயும் படிக்கனும்,அப்புறம் நாலடியார், திருவாசகம் தொல்காப்பியம் எல்லாம் படிக்கனும்"

"அற்புதம் அற்புதம் தமிழ்மொழி காவியங்களை படிக்கனும் படிக்கலாம் தாராளமா படிக்கலாம் "

இப்போ நீ படித்த திருக்குறள் எது சொல்லமுடியுமா..?"

"ஒரு சில குறள்கள் தான் தெரியும்"

"சொல்லு கேட்போம் "

"கடவுள் வாழ்த்து...."

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

"கடவுள் வாழ்த்து சரி அடுத்த குறளை நான் கேட்கட்டுமா..."

"சரி கேளுங்களய்யா.."

"கல்வியில் ஒரு குறள் சொல்லு "

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக."

"சபாஷ்...சிறப்பு.. அன்புடைமையில்..."

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு "

"அற்புதம் குணவதி அற்புதம் செய்ந்நன்றி...."

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று "

"குணவதி உனக்கு ஞானசக்தி இருக்கிறது அதனால் கேட்கும் குறளுக்கு எல்லாம் சிறப்பா சொல்கிறிர்கள் "

"அய்யா ஆத்துல தண்ணீ போனதை என் அப்பா கிட்டே பாடினேன் "அப்படியா...மகிழ்ச்சி எங்கே பாடு"..

"காக்க வேணும் காக்க வேணும் அய்யனாரே ! மனச கலங்க வச்சு வேடிக்கைப் பார்க்குறே அய்யனாரே ! ஆத்துத் தண்ணீயில கழிவ கலக்க வச்ச மனுசப்பயல தண்டிக்காம விட்டியே அய்யனாரே ! இனிப்பா இருந்த ஊத்துத்தண்ணீ மாறிப் போச்சே அய்யனாரே...! "

குணவதி பாடியதைக் கேட்டதும் நூலகத்தில் உள்ளோர் அனைவரும் கையொலி எழுப்பினார்கள்

"எங்கள செருப்பாலே அடிச்சது போல் கேட்டியே பாப்பா அந்த வைகை நதி தாயே வந்து கேட்டது போல் இருக்கு உன்னை வணங்குகிறேன் தாயே " என வயதானவர் நெகிழ்ச்சியுடன் பாராட்டினார்

"உன் ஆற்றலுக்கு என் பரிசு "என நூறு ரூபாய் தாளை எடுத்து கொடுக்க

"இல்லங்கய்யா எனக்கு பணமெல்லாம் வேண்டாம் நூலகத்தில் படிக்க அனுமதி தந்தால் போதும்" என குணவதி சொல்ல

"குணவதி உனக்குத் தான் அனுமதி கொடுத்தேனே எப்போது வேண்டுமானாலும் வாங்கன்னு " என நூலகர் சரவணன் சொல்லவும்

"மகிழ்ச்சி அய்யா.."

"அய்யா நூலகரய்யா பாப்பாவுக்கு நல்ல நூல்கள் வாங்கி கொடுங்கள் "என்று பணத்தை அவரிடம் கொடுத்தார்

நாளைக்கு வா குணவதி உனக்கு எப்பவும் படிக்க மகாகவி பாரதியார் புத்தகமும் புரட்சிகவி பாரதிதாசன் புத்தகமும் உனக்கு வாங்கி தருகிறேன் என்று நூலகர் சொல்ல

"சரிங்கய்யா உங்கள் அணைவருக்கும் என் பணிவான வணக்கங்கள் வருகிறேன் "என விடை பெற்றுச் சென்றாள் குணவதி

நல.ஞானபண்டிதன்
திருப்புவனம் புதூர்

தினம் ஒரு சமையல்

சுண்டைக்காய் தக்காளி தொக்கு

தேவையான பொருட்கள்:

கைப்பிடி பச்சை சுண்டைக்காய்	-1
பெரிய வெங்காயம்	-2
தக்காளி பழம்	-3
புளி	-சிறியநெல்லிக்காய் அளவு
மிளகாய்த்தூள்	-தேவைக்கேற்ப
மல்லி தூள்	-தேவைக்கேற்ப
மஞ்சள் தூள்	-தேவைக்கேற்ப
நல்லெண்ணெய்	-1/4 கப்
உப்பு	

செய்முறை:

சுண்டைக்காயை இடிக்கல் வைத்து தட்டி தண்ணீரில் நன்றாக கழுவவும்.

கடாயை ஸ்டவ்வில் வைத்து என்னை விட்டு காய்ந்ததும் நறுக்கிய வெங்காயம் மற்றும் சுண்டைக்காய் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

இதில் மிளகாய் தூள் மஞ்சள் தூள் மல்லித்தூள் சேர்த்து தக்காளியை நறுக்கி சேர்த்து என்னை மேலே பிரிந்து வரும் வரை வதக்கி அதன் பிறகு தேவையான அளவு புளி கரைசல் மற்றும் தண்ணீர் விட்டு சுண்டைக்காய் வெந்தபின் தேவைக்கேற்ப உப்பு சேர்த்து பரிமாறலாம்.

மந்தாரை பயன்கள்

திருவாச்சி மரம் அல்லது மந்தாரை மரம், இளமஞ்சள் நிறத்தில் அழகிய மலர்களை உடைய, இளம்பச்சை நிற இலைகளைக் கொண்ட திருவாச்சி, இன்று மிக அரிதாகக் காணப்படும் ஒரு குறுமரமாகிவிட்டது. சிருவாச்சி, இருவாச்சி, திரு ஆத்தி, மந்தாரை எனப் பல பெயர்களில் அழைக்கப்படுவது போலவே, திருவாச்சி மரமும் பல விதங்களில் மனிதரின் வியாதிகள் தீர, மருத்துவப் பலன்கள் தருபவை. ஆன்மீகத்திலும், சித்த வைத்தியத்திலும் பெரும் பயனாகும், திருவாச்சி, தமிழ் சங்கீத இசை உலகிலும், வாத்தியங்களுக்கு இன்றியமையாத ஒரு துணையாகவும் விளங்குகிறது.

மந்தாரை (HIBISCUS) என்பது தமிழர் பாரம்பரியத்தில் அழகு, ஆரோக்கியம், மற்றும் ஆன்மீகத்திற்கு இணையாகக் கருதப்படும் ஒரு அற்புதமான செடி. இதன் மலர்கள் மட்டுமின்றி, இலைகளும் நம் உடல்நலத்திற்கு பெரும் பலன்களை தருகின்றன.

மந்தாரை இலைகள் சுண்ணாம்பு பசுமை நிறத்துடன், மென்மையான அமைப்பைக் கொண்டவை.

தமிழர் இல்லங்களில் மந்தாரை செடி பெரும்பாலும் வீட்டின் முன்பாக வளர்க்கப்படும். மலர்கள் பூஜைக்குப் பயன்படுத்தப்படுகின்றன; இலைகள் மருத்துவம் மற்றும் சமையலில் இடம்பிடித்துள்ளன.

இலை, மலர் மற்றும் பட்டை இவற்றின் மூலம், நலம் தரும் மருத்துவ பலன்களைக் கொண்டது, திருவாச்சி.

உடலுக்கு நலம் தரும் திருவாச்சி மரம், வயிறு தொடர்பான அனைத்து பாதிப்புகளுக்கும் நிவாரணம் தரும், கை கால் வலிகளைப் போக்கும் தன்மை மிக்கது, உணவை உண்ணப் பயன்படும் வாழை இலைகளைப்போல திருவாச்சி இலைகள் பயன் தந்து, மனிதர்களின் உடல் மன வியாதிகளைப் போக்கும் இயல்புடையது, திருவாச்சி இலைகள். இரத்த பேதி, இரத்த வாந்தி, மலச்சிக்கல் போக்கும் ஆற்றல் உள்ளவை.

பாரம்பரிய மருத்துவம்:

தலைவலி மற்றும் வெப்பத்தைக் குறைக்கும்

முடி உதிர்வு மற்றும் பொடுகு குறைக்கும் ஹேர் பாக்ஸ் தயாரிக்க

வயிற்றுப்போக்கு, குடல்வலி ஆகியவற்றுக்கு தண்ணீரில் கொதிக்க வைத்து குடிக்க

காய்ச்சல், இருமல், சளி போன்ற பிரச்சினைகளில் இலைகளை நசுக்கி சாறு எடுத்து குடிக்க

நவீன மருத்துவம்:

ஆன்டி-ஆக்சிடன்ட் நிறைந்ததால் இதய ஆரோக்கியம்

இரத்த அழுத்தம் கட்டுப்படுத்துதல்

ரத்த சர்க்கரை அளவு சீராக வைத்தல்.

சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

டிராபிக் கான்ஸ்டபிள்:

யோவ் நடுரோட்டை விட்டு ஓரமா போய்யா. வண்டிக்காரனுங்க வந்து மோதிடப் போறானுங்க.

குடிகாரன்: என்னை ஓரமா போகச் சொல்லிட்டு நீங்க மட்டும் நடுரோட்டிலே நின்னா எப்படி.

சினிமா

மீண்டும் மமிதா பைஜுவுடன் இணையும் பிரதீப் ரங்கநாதன்.. ஆனால்...

கோமாளி படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி பின் லவ் டுடே படத்தின் மூலம் ஹீரோவாக களமிறங்கியவர் பிரதீப் ரங்கநாதன்.

இதன்பின் டிராகன், DUDE என தொடர்ந்து வெற்றி படங்களை கொடுத்து இன்று தனக்கென்று தனி இடத்தை தமிழ் சினிமாவில் பிடித்துள்ளார்.

இந்த நிலையில், இயக்குநர், ஹீரோவை தாண்டி தற்போது தயாரிப்பாளராகவும் பிரதீப் ரங்கநாதன் அறிமுக மாகவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இப்படத்தை பிரதீப் ரங்கநாதனின் துணை இயக்குநர் இயக்கவுள்ளாராம். சென்சேஷனல் நடிகை மமிதா பைஜூ இப்படத்தில் கதையின் நாயகியாக நடிக்கப்போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரதீப் ரங்கநாதன் மற்றும் மமிதா பைஜூ இதற்கு முன் DUDE படத்தில் இணைந்து நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாஷிகா தற்போது வெறும் பூக்கள் மற்றும் பிளாஸ்டிக் கவரை வைத்து உடையாக சுற்றிக்கொண்டு மிக கவர்ச்சியாக போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அதை பார்த்து ரசிகர்கள் ஆச்சர்யம் அடைந்து இருக்கின்றனர்.

அந்த படத்தில் நான் நடிக்கவில்லை.. மறுத்த விஜய் சேதுபதி

நடிகர் விஜய் சேதுபதிக்கு தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழிகளிலும் தற்போது அதிகம் பட வாய்ப்புகள் வருகிறது.

இருப்பினும் கெஸ்ட் ரோலில் இனி நடிக்க மாட்டேன் என விஜய் சேதுபதி கூறிவிட்டதால் அவர் நடிக்கும் படங்களின் எண்ணிக்கையும் சமீப காலமாக குறைந்து வருகிறது.

விஜய் சேதுபதி அடுத்து ஹிந்தியில் ரன்பீர் கபூர் நடிக்கும் ராமாயணம் படத்தில் விபீஷணன் ரோலில் நடிக்க போவதாக சமீபத்தில் செய்தி பரவியது.

ஆனால் நான் அந்த படத்தில் நடிக்கவில்லை என விஜய் சேதுபதி விளக்கம் கொடுத்து இருக்கிறார். இப்படி ஒரு செய்தி எப்படி பரவியது என தனக்கு தெரியவில்லை என அவர் கூறி இருக்கிறார்.

இந்த படத்தில் சீதையாக சாய் பல்லவி, ராவணன் ஆக KGF புகழ் யாஷ் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

கைசிக ஏகாதசி சிறப்புகள்

கார்த்திகை மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசி கைசிக ஏகாதசி என்று கூறப்படுகிறது. இதன் பெருமைகளை நாம் காண்போமா?
கார்த்திகை மாத தேய்பிறை ஏகாதசி ரமா ஏகாதசி எனவும், வளர்பிறை ஏகாதசி பிரமோதினி ஏகாதசி எனவும் என்றும் அழைக்கப்படுகிறது. பிரமோதினி ஏகாதசியே கைசிக ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது.

கைசிக ஏகாதசியின் சிறப்பு:
இந்தக் கைசிகப் பண் ஏகாதசியன்று திருக்குறுங்குடி கோவிலில் குடி கொண்டுள்ள நம்பியின் மீது, பக்தியுள்ள பாணர் குலத்தைச் சேர்ந்த நம்பாடுவான் என்னும் பக்தரால் பாடப்பட்டதாகும். கைசிக ஏகாதசி வரலாற்றை நினைவு கூறுவதே இந்த ஏகாதசியின் சிறப்பாகும்.

திருக்குறுங்குடி உற்சவம் :
திருக்குறுங்குடியில் என்றும் கைசிக ஏகாதசி அன்று நம்பாடுவானின் கதை நாடகமாக நடித்துக் காட்டப்படுகிறது.
இந்த ஏகாதசி என்று விரதம் இருந்தால், ஆண்டில் அனைத்து ஏகாதசி விரதங்களும் இருந்த பலன் கிடைக்கும். அன்று துளசி இலை கொண்டு பகவான் ஸ்ரீ விஷ்ணுவை வணங்குவது மிகவும் சிறப்பாகும் நவரத்தினத்தை பகவானுக்கு சமர்ப்பிப்பதை காட்டிலும் உத்தமமாகும்.

கைசிகம் என்பது ஒரு வகை பண் ஆகும். இது வராக அவதாரத்தில் பூமாதேவித் தாயாருக்கு வராகப் பெருமாள் கூறியதாகும். அதாவது இந்தச் சரித்திரம் வராக மூர்த்தி பூமி பிராட்டியிடம் சொன்னது. வசுந்தரா தேவியிடம் சொன்னது.

பெருமாளுக்கு ஜாதி, குலம் போன்ற வித்தியாசம் கிடையாது. பக்தனா? என்பது மட்டும்தான் பகவான் பார்க்கிறான்.

திருப்பதி கோவிலுக்கு செல்கின்றவர்கள் பலர் பாமரர்கள். அவர்கள் இடைவிடாது நாம ஜெபம் கோவிந்தா! கோவிந்தா! என்று சொல்லிக் கொண்டே மலையேறுவர். பொது தரிசனத்தில் பகவான் கோவிந்தனை ஒரு சில நொடிகள் மட்டுமே தரிசிக்கின்றனர். பகவான் மலையப்பனோ அவர்களை திவ்யமாக கடாக்ஷிகிறார்.

திருக்குறுங்குடி என்ற திவ்ய தேசம், திருநெல்வேலிக்கு அருகே வானமாமலைக்கு அருகில் உள்ளது.

இதன் அருகில் மகேந்திரபுரி உள்ளது.
இந்தக் கோவிலில் பெருமாளின் பெயர் சுந்தர பரிபூரண நம்பி என்றும், அழகிய நம்பி என்றும் வடிவழகிய நம்பி என்றும் அழைப்பார்கள். பராங்குச நாயகி என்னும் நாயிகா பாவத்தில் நம்மாழ்வார் பாடும் பாசுரம்.

எங்ஙனேயோ
அன்னைமீர்காள்! என்னை
முனிவது நீர்
நங்கள் கோலத்
திருக்குறுங்குடி நம்பியை
நான் கண்ட பின்
சங்கினோடும் நேமியோடும்
தாமரைக் கண்களோடும்
செங்கனிவாய் ஒன்றினோடும்
செல்கின்றதென் நெஞ்சமே

அன்னைமீர்காள்! என்னைப் பெற்ற நீங்கள் எனக்கு விருப்பமானதைச் செய்யாமல், என்னை நினைத்து உகக்க வேண்டியிருக்க இப்படிக் கோபப்படுவது ஏன்? நம் குடிக்குத் தனித்துவம் வாய்ந்தவராய், அழகிய திருமேனி உடையவராய், திருக்குறுங்குடியில் கல்யாணகுண பூர்த்தியையுடைய நம்பியை நான் அனுபவித்தபின் அவருடைய சங்கினோடும், திருவாழியோடும், தாமரைபோலே அழகாய் இருக்கும் திருக்கண்களோடும் சிவந்த கனிபோலே தனித்துவமாய் இருக்கும் திருவதரத்தோடும் என் நெஞ்சு ஆசையுடன் செல்கிறது.
என்ற அனுபவித்து பாடுகிறார்.

திருக்குறுங்குடி அருகில், பாணர் குலத்தில் பிறந்த நம்பாடுவான் என்பவர் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு ஏகாதசியும் விரதம் இருந்து அன்று இரவு, திருக்குறுங்குடி கோவில் வாசலில் நின்று நம்பியை தியானித்து பண்வாசிப்பது வழக்கம். ஒரு நாள் கோவில் திறந்ததும் அர்ச்சகர் அளிக்கும் பிரசாதத்தை பெற்றுக் கொண்டு தன்னுடைய துவாதசி பாரணையை முடித்துக் கொள்வார்.

கார்த்திகை மாதம் பௌர்ணமிக்கு பிறகு வரும் ஏகாதசி அன்று வழக்கம்போல் காட்டு வழியாக செல்லும் பொழுது நம்பாடுவானை ஒரு பிரம்ம ராட்சசன் பிடித்துக் கொண்டான்.
பிரம்ம ராட்சசன் நம்பாடுவானை சாப்பிடத் தயாராக இருந்தது.
நம்பாடுவான் பிரம்ம ராட்சசனிடம் நான் திருக்குறுங்குடி சென்று நம்பிக்கு கைசிகப் பண்ணில் பாட்டுப் பாடி அவரை வழிபாடு செய்து விட்டு வந்து உனக்கு இரையாகிறேன் என்று கூறினார். ஆனால் ராட்சசன் அவருடைய வார்த்தைகளை நம்பவில்லை.
நம்பாடுவான் 18 சத்தியங்களை பிரம்ம ராட்சசனிடம் செய்தான்.
அதற்கு நம் பாடுவான் நான் திரும்பி வராவிட்டால், சத்தியத்தை மீறியவன் எந்த நரகத்தை சென்று அடைவானோ அந்த நரகத்தை அடைவேன் என்று கூறினார்.
பிறர் மனைவியை ஆசைப்பட்டவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன், ஆனால் ராட்சசனோ எதற்கும் மசியவில்லை.

நான் நம்பாடுவான் ஒவ்வொரு சத்தியமாக செய்து கொண்டே போகிறான். வேதம் படித்தவர்களை கொல்வது, மது அருந்துவது, தான் நல்ல உணவை உண்டு விட்டு விருந்தினர்களுக்கு, சுமாரான உணவை தருபவன், எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன் என்றான்.

ஒருவன் நிலத்தை தானம் கொடுத்து விட்டு, அந்த நிலத்தைய அபகரித்துக் கொள்பவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

இளம் பெண்ணை திருமணம் செய்து கொண்டு அவனை ஏமாற்றியவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

அமாவாசை, ஏகாதசி மற்றும் சிரார்த்த நாட்களில் தன் மனைவியுடன் தாம்பத்யம் வைத்துக் கொள்பவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

உண்ட வீட்டிற்கே எவன் துரோகம் நினைக்கின்றானோ அவனடையும் நரகத்தை நான் அடைவேன்.

தன்னுடைய பெண்ணை ஒருவருக்கு திருமணம் செய்து கொடுப்பதாக சொல்லிவிட்டு, வேறு ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டால், அவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

தினமும் குளிக்காமல் உணவருந்துபவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

ஒருவருக்கு இந்த நாளில் இந்த பொருளைத் தருகிறேன் என்று வாக்கு கொடுத்துவிட்டு, அதே தினம் அந்த நபர் வந்தவுடன் தரமாட்டேன் என்று கூறுபவன் எந்த நரகத்தை அடைகிறானோ அந்த நரகத்தை அடைவேன்.

நண்பனின் மனைவியை அபகரித்தவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

ராஜபத்தினி குரு பத்தினியை அபகரித்தவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

இரண்டு மனைவிகளை திருமணம் செய்து கொண்டு, ஒரு மனைவியிடம் மட்டுமே அன்பு செலுத்துபவன் எந்த நரகத்தை அடைவானோ அந்த நரகத்தை அடைவேன்.

பிரம்ம ராட்சசன் இவ்வாறு கூறியதும் நம்பாடுவான் அவனிடம், நான் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி பகவானை நோக்கி பாடி விட்டு வருகின்றேன். நான் உனக்காக பகவானிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றேன் என்று கூறி, பிரம்ம ராக்ஷசனுக்காக நம்பாடுவான் கைசிகப் பண்ணில் பாடி வேண்டிக் கொண்டான். பெருமாளுடைய கடாக்ஷத்தால் அந்த பிரம்ம ராக்ஷசனும் சாப விமோசனம் பெற்றான்.

பெருமாள், நம்மை பாடுபவன் என்ற காரணத்தினால் அவனுக்கு "நம்பாடுவான்" என்ற பெயரளித்தார்.

நம்பாடுவான் நீண்ட காலங்கள் வாழ்ந்து பெருமாளுக்கு கைங்கரியம் செய்து முக்தி அடைந்தான்.

ஹரே கிருஷ்ணா
கீதா வீரராகவன்
ஸ்ரீரங்கம்.

தினம் ஒரு தலைவர்கள்

துரைச்சாமி வரலாறு

துரைச்சாமி சிவகங்கைச் சீமையில் ஆங்கிலக் கிழக்கந்தியக் கம்பெனியர்க்கு எதிராக 1785 முதல் 1801 முடியப் போராடி தம் இன்னுயிர் ஈந்த சின்ன மருதுவின் மகன்.

வாழ்க்கைச் சுருக்கம் :
சின்ன மருது மகன் துரைச்சாமியின் இயற்பெயர் முத்து வடுக நாத துரை என்றும் பின்னர் அப்பெயர் துரைச்சாமி என மருவியது என்றும் சிவகங்கை அம்மானை எனும் நூல் மூலம் அறியமுடிகிறது.
துரைச்சாமி உட்பட 11 விடுதலைப் போராளிகளைப் பிடித்துக்கொடுத்தால் 1000 சூலிச்சக்கரங்கள் (18ம் நூற்றாண்டு நாணயம்) பரிசாக வழங்கப்படும் என்று ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனித் தளபதி கர்னல் அக்னியூ 1801, அக்டோபர் 1 இல் சிவகங்கை குடிமக்களுக்கு ஒரு பொது அறிவிப்பை பிரகடனப்பத்தினார்.
மருது சகோதரர்கள் 1801, அக்டோபர் 24 இல் தூக்கிலிடப்பட்ட பின்னர் 15 வயதே ஆன துரைச்சாமி உட்பட 73 விடுதலைப் போராளிகளை மலேயாவின் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவிற்கு (இன்றைய பினாங்கு) 1802, பெப்ரவரி 11 இல் தளபதி வெல்ஸ் நாடுகடத்தி அனுப்பிவைத்தார்

பினாங்கில் துரைச்சாமி :

1818 ஆம் ஆண்டு தளபதி வெல்ஸ் (COLONEL WELSH) பினாங்குக்குச் சென்றபோது உடல் நலம் குன்றிய தோற்றத்துடன் காணப்பட்ட துரைச்சாமியைக் காண நேரிட்டது. துரைச்சாமியின் இத்தோற்றம் வெல்ஸ் தம் இதயத்தில் கத்தி பாய்ந்தது போன்று இருந்தது என குறிப்பிடுகின்றார்.

துரைச்சாமியின் இறுதி நாட்கள் :

கிழக்கிந்திய கம்பெனியின் உயர் அதிகாரி ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ், 1818ல் பினாங் வந்து இறங்கினார். ஓய்வெடுப்பதற்காக பினாங்கில் தங்கியிருந்த வெல்ஷைப் பார்க்க ஒரு பார்வையாளன் காத்திருந்தான். அவன் ஒரு கிழவன். தோல் சுருங்கி, தலை நரைத்து, உடல் மெலிந்து, கைகள் நடுங்க நின்று கொண்டிருந்த அந்தக் கிழவனை உற்றுப் பார்த்தான் ஜெனரல் வெல்ஷ்.

"யார்?'

கிழவனால் பதில் சொல்ல முடியாமல் உதடுகள் நடுங்கின. தன்னை வெல்ஷ் அடையாளம் கண்டு பிடித்து விடுவான் என்ற நம்பிக்கையோடு, ஆதரவற்ற கண்களால் ஜெனரல் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் கிழவன்.

அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"யார் நீ?' இம்முறை கோபத்தில் வெடித்தது வெல்ஷின் குரல். பயத்தில், ஆடிப் போனான் கிழவன். கைகளை மடித்து, உடம்போடு ஒட்டிக் கொண்டு, கூனிக் குறுகிப் போய், உதடுகளும், கண்களும் துடிக்க, ஒரே ஒரு சொல் வெளிப்பட்டது கிழவனிடமிருந்து...

"துரைசாமி!'

அந்தப் பெயர் வெல்ஷின் முகத்தில் அறைந்தது. இவனா? இவனா? அந்த துரைசாமியா இவன்?

பதினைந்து வயது பையனாக, 1802ல் வெளி உலகக் கொடுமையின் சாயல் கூடப் படியாத குழந்தை முகத்தோடு, தூத்துக்குடியில் கப்பலேற்றப்பட்டு, தீவாந்தர தண்டனைக்காக நாடு கடத்தப்பட்ட அந்தத் துரைசாமியா?

தடித்த ஆற்காடு நாணயத்தைத் தன் இரண்டு விரல்களால் வளைத்து எறிந்த பெரிய மருதுவின் பரம்பரையில் உதித்த துரைசாமியா?

எவ்வளவு தொலைவில் எதிரி இருந்தாலும், குறி தப்பாமல் ஈட்டி எறியும் வீரன்... கர்னல் பதவியில் இருந்த போது வெல்ஷிக்கு வளறித்தடி சுழற்றும் வித்தையைக் கற்றுக் கொடுத்த மாவீரன் சின்ன மருதுவின் மகன் துரைசாமியா?

துரைசாமியைப் பார்த்து இரக்கப்பட்டான் ஜெனரல் ஜேம்ஸ் வெல்ஷ்; ஆனால், கம்பெனி விதிகளுக்கு எதிராக அவனால் துரைசாமிக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அவன் வெள்ளை அதிகாரி. ஒரு காலத்தில் அவன் மருதுபாண்டியரின் நண்பன். பிறகு அவர்களை வேட்டை நாயாகத் துரத்திப் பிடித்து, தூக்கில் போட்டவனும் அவன் தான்.

கம்பெனி உத்தரவின் படி துரைசாமியைத் தூத்துக்குடி வரை கொண்டு சென்று, கப்பலேற்றி, "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' என்ற தீவுக்கு நாடு கடத்தியவனும் அவன் தான்.

பதினாறு ஆண்டுகளில், தீவாந்தர தண்டனையும், கொத்தடிமை வாழ்க்கையும் ஆங்கிலக் கொடுமைகளும் ஒரு இளைஞனை கிழவனாக்கி விட்ட கொடுமை வெல்ஷை உலுக்கியது. ஆனாலும், அவன் என்ன செய்வான். பாவம்!

இந்த மண்ணில் போராடி வீழ்ந்து, சருகாகி, உரமாகி மக்கிப்போன பல குடும்பங்களை, சிதிலமாகிப் போன அவர்களது பரம்பரைகளை ஒரு நொடி ஈரத்தோடு எண்ணிப் பார்க்க நமக்கு நேரமில்லையே!

பினாங்கில் வெல்ஷம், துரைசாமியும் சந்தித்த அந்த நிகழ்ச்சிதான் மருதுபாண்டியர் வாரிசு பற்றி ஆதார பூர்வமாகக் கிடைத்த கடைசிச் செய்தி!

இன்னும் எத்தனை, எத்தனை துரைசாமிகளோ!

1891, மே 18 ஆம் நாள் போராளி துரைச்சாமியின் மகன் மருது சேர்வைகாரன் என்பான் மதுரைக் கலக்டரிடம் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்த மனுவில் துரைச்சாமியின் இறுதி நாட்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். துரைச்சாமி பினாங்கிலிருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்டார். அவர் ஆங்கில அரசிடம் பாதுகாப்புக் கோரி மதுரையில் தங்கியிருக்க அனுமதி கேட்டிருந்தார். ஆனால் திடிரென துரைச்சாமி நோய்வாய்ப்பட்டு சிவகங்கைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு காலமானார் என்று அவரது மகன் குறிப்பிடுகின்றார்...

கேரளாவின் முதல் பார்வை மாற்றுத்திறனாளி நீதிபதி – 24 வயதான தன்யா நாதன் சாதனை!

கேரளாவின் முதல் பார்வை மாற்றுதிறனாளி சிவில் நீதிபதி என்ற பெருமையை 24 வயதான தன்யா நாதன் பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் மாற்றுத்திறனாளிகள் நீதித்துறை சேவையில் சேர அனுமதி அளித்தது. இதையடுத்து கண்ணூர் மாவட்டத்தை சேர்ந்த பார்வைக் குறைபாடுள்ள சட்டப் பட்டதாரி தன்யா நாதன், இந்த தீர்ப்பால் ஈர்க்கப்பட்டு, நீதித்துறை சேவைத் தேர்வுக்குத் தயாராக முடிவு செய்தார்.

தற்போது, அவர் மாற்றுத்திறனாளிகள் பிரிவின் கீழ் சிவில் நீதிபதி (ஜூனியர் பிரிவு) தேர்வில் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். இதன்மூலம் கேரளாவின் முதல் பார்வை குறைபாடுள்ள நீதிபதியாக மாற உள்ளார்.

ப்ரெய்லி முறையில் சட்டப் படிப்பை படித்துள்ள இவருக்கு விரைவில் பணி நியமனம் வழங்கப்பட உள்ளது.

கர்நாடக முதல்வர் விவகாரம்! நானும் சித்தராமையாவும் பேசியது எங்களுக்குத் தெரியும்!

டி.கே. சிவக்குமார் பேச்சு!

கர்நாடக தலைமை விவகாரம் குறித்து, ”நானும் முதல்வர் சித்தராமையாவும் என்ன பேசினோம் என்பது எங்களுக்குத் தெரியும்” என துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியுள்ளார்.

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி அமைந்து இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் துணை முதல்வரான டி.கே. சிவக்குமார் முதல்வராகப் பதவியேற்பார் என அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் உருவாகின.

இதையடுத்து, முதல்வர் சித்தராமையா மற்றும் டி.கே. சிவக்குமார் ஆகியோரின் ஆதரவாளர்கள் தொடர்ந்து கருத்து மோதல்களில் ஈடுபட்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, இருவரும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே உள்ளிட்ட மூத்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

மேலும், முதல்வராக சித்தராமையா தொடர்வார் எனக் கூறப்பட்டது. இருப்பினும், இந்த விவகாரம் தொடர்ந்து பேசுபொருளாகி வருகின்றது.

இந்த நிலையில், பெங்களூரில் இன்று (பிப். 10) தில்லிக்குச் செல்லும் முன்பு செய்தியாளர்களுடன் பேசிய துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியதாவது:

“மற்றவர்களுக்கு குழப்பம் இருக்கலாம். ஆனால், எனக்கும் முதல்வர் சித்தராமையாவுக்கும் இடையில் எந்தவொரு குழப்பமும் இல்லை. நாங்கள் என்ன பேசினோம் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் தனிமையில் பேசவில்லை. கட்சியின் தலைமையுடன் பேசினோம். அந்தப் புரிதலுக்கு ஏற்ப நடந்து கொள்கிறோம்” எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தேர்தல்கள் குறித்து காங்கிரஸ் தலைமையுடன் முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்வதற்காக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் தில்லி செல்வதாகவும், இதுபற்றி, முதல்வர் சித்தராமையாவிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுடன் டெல்லியில் காங்கிரஸ் தலைமை ஆலோசனை

புதுடெல்லி, பிப்.11: தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுடன் டெல்லியில் காங்கிரஸ் தலைமை ஆலோசனை நடைபெற்று வருகிறது.

ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, கே.சி.வேணுகோபால் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, புதிதாக தேர்வுசெய்யப்பட்ட 74 மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

100 நாள் வேலை திட்டத்தில் காந்தி பெயர் மாற்றம், அரசியல் மற்றும் கட்சி பிரச்சனைகள் குறித்து கூட்டத்தில் விவாதம் நடைபெற்று வருகிறது.

டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் பாதித்தோருக்கு மத்திய அரசு இழப்பீடு வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, பிப்.11: டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்தது. தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜாய்மால்ய பாக்சி, அன்ஜாரியா அமர்வு முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசு சார்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி ஆஜரானார். அவர் கூறும்போது, “டிஜிட்டல் அரெஸ்ட் மோசடிகளை தடுக்க ரிசர்வ் வங்கி வரைவு கொள்கையை தயாரித்து உள்ளது. இதுதொடர்பாக தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது” என்றார்.

இந்த வழக்கில் உதவ உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் நப்பினை கூறும்போது, “சந்தேகத்துக்குரிய வங்கி பணப் பரிமாற்றங்களை கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும்” என்று ஆலோசனை வழங்கினார்.

இறுதியில் தலைமை நீதிபதி அமர்வு முக்கிய உத்தரவை பிறப்பித்தது. அதில் கூறியிருப்பதாவது: கடந்த 2021 ஏப்ரல் முதல் 2025 நவம்பர் வரை நாடு முழுவதும் டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் அப்பாவி பொதுமக்கள் ரூ.54,000 கோடியை இழந்துள்ளனர். இது மிகப்பெரிய கொள்ளை ஆகும். இந்த தொகை பல்வேறு மாநிலங்களின் பட்ஜெட்டுக்கு இணையாக உள்ளது.

பெரும்பாலான டிஜிட்டல் அரெஸ்ட் மோசடிகளுக்கு வங்கி அதிகாரிகளின் அலட்சிய போக்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. பொது மக்களின் பணத்துக்கு வங்கிகளே பாதுகாவலர்கள். வங்கிகளை நம்பியே பொதுமக்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்கின்றனர்.

பொதுவாக ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஒரு மாதத்தில் சுமார் ரூ.20,000 மட்டுமே பணத்தை எடுப்பது வழக்கமாக உள்ளது. ஆனால் அவரது வங்கிக் கணக்கில் ஒரே நேரத்தில் ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை பணம் எடுக்கப்படுவதை வங்கி நிர்வாகங்கள் கவனிக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற சந்தேகத்துக்குரிய பணப் பரிமாற்றங்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வங்கி அதிகாரிகள் எச்சரிக்கை தகவல்களை அனுப்ப வேண்டும்.

டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் பாதிக்கப்படுவோருக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில், ரிசர்வ் வங்கி, தொலைத் தொடர்பு அமைச்சகத்துடன் ஆலோசிக்க வேண்டும். இதன் அடிப்படையில் அடுத்த 4 வாரங்களுக்குள் வழிகாட்டு நெறிகளை வரையறுக்க வேண்டும். இவ்வாறு தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பான அனைத்து வழக்குகளையும் சிபிஐ-க்கு மாற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு ஒப்புதல் வழங்குமாறு டெல்லி, குஜராத் அரசுகளுக்கும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது.

டெல்லி விமான நிலையத்தில் சச்சின் டெண்டுல்கரை சந்தித்த முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு

ஆந்திர மாநில பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு நேற்று டெல்லி புறப்பட்டு சென்றார்.

டெல்லி விமான நிலையத்திற்கு சென்றபோது பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை எதேர்ச்சியாக சந்தித்தார். சந்திரபாபு நாயுடு சிறிது நேரம் சச்சின் டெண்டுல்கருடன் உரையாடினார்.

ஜல் சக்தி மந்திரி சி.ஆர். பாட்டில், உள்துறை மந்திரி அமித்ஷா, நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வேளாண் துறை மந்திரி சிவராஜ் சிங் மற்றும் ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோரை சந்தித்து பேசுகிறார்.

அப்போது அமராவதி கட்டுமான பணிக்கு அதிக நிதி, கலப்பட நெய் வழக்கு மற்றும் 16-வது நிதி அறிக்கை பரிந்துரைகளால் மாநிலத்திற்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பு குறித்து ஆலோசிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆந்திராவில் பூட்டிய வீடுகளில் திருடி சொகுசு வாழ்க்கை வாழ்ந்த ஐடி ஊழியர் கைது

விசாகப்பட்டினம், பிப்.11: சொகுசு வாழ்க்கை வாழ பூட்டிய வீடுகளில் திருடிய ஐடி ஊழியரை ஆந்திர போலீஸார் கைது செய்துள்ளனர்.

ஆந்திர மாநிலம், காக்கி நாடா பகுதியை சேர்ந்தவர் மகேஷ் ரெட்டி என்கிற சன்னி (27). விசாகப் பட்டினத்தில் ஐ.டி மேற்படிப்பை முடித்த மகேஷ் ரெட்டிக்கு ஹைதராபாத்தில் ஒரு பிரபல ஐடி நிறுவனத்தில் வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளம். ஆனாலும் அது அவரின் ஆசைகளை நிறைவேற்ற உதவவில்லை. மகேஷ் ரெட்டிக்கு சிறு வயதிலிருந்தே திருடும் பழக்கம் இருந்துள்ளது.

இதனால் அவர் தனது 15 வயதில் திருடி மாட்டிக் கொண்டார். அதன் பிறகு, அவர் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் படித்தார். தற்போது ஐடி துறையில் பட்ட மேற்படிப்பு படித்த பிறகு, தனது ‘கை’த்தொழிலில் மீண்டும் கவனம் செலுத்த ஆரம்பித்தார். இதற்காக ஒரு பைக் வாங்கினார்.

அதில் நம்பர் பிளேட் போடாமல், முகக்கவசம், கையுறை அணிந்து இரவு நேரங்களில் பூட்டிய வீடுகளில் பூட்டை உடைத்து, பீரோவில் உள்ளதை அள்ளிச் செல்வதை வழக்கமாக்கி கொண்டார். இதற்காக கட்டிங் பிளேயர், ஸ்க்ரூ டிரைவர், ட்ரில்லிங் இயந்திரம் போன்றவற்றையும் வாங்கி வைத்து உள்ளார்.

பல முறை ராமசந்திராபுரம், இந்திர பாளையம், ராஜமுந்திரி சிறைகளுக்கு சென்றுள்ளார். இது வரை அவர் 60 வீடுகளில் திருடி உள்ளார். 26 வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளன. சமீபத்தில் 14 மாதங்கள் வரை இவர் சிறை தண்டனை அனுபவித்து உள்ளார். ஆயினும் இவர் திருடுவதை கைவிடவில்லை. ஏனெனில், இவருக்கு ஆடம்பரமாக வாழ்வது மிகவும் பிடிக்குமாம்.

அதாவது, பிஎம்டபிள்யூ சொகுசு கார், அடிக்கடி வெளிநாட்டு சுற்றுலா, கழுத்திலும், கையிலும் தங்க செயின்கள், பிரேஸ்லெட். 4 விரல்களில் தங்க மோதிரம் அணிந்திருப்பார். இந்த வாழ்க்கை மிகவும் பிடித்து போனதால், போலீஸார் கைது செய்தாலும், மீண்டும் திருட்டு தொழிலையே செய்து, சொகுசு வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார் மகேஷ் ரெட்டி.

இந்நிலையில் கடந்த 8-ம் தேதி விசாகப்பட்டினத்தில் மகேஷ் ரெட்டியை போலீஸார் கைது செய்தனர். அப்போது அவரிடமிருந்த 699 கிராம் தங்க நகைகள், 3.8 கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் பிஎம்டபிள்யூ சொகுசு கார் போன்றவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இது தவிர ரூ.15.63 லட்சம் மதிப்புள்ள பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மகேஷ் ரெட்டி விசாகப்பட்டினம் மட்டுமின்றி, ஹைதராபாத், காக்கி நாடா ஆகிய பகுதிகளிலும் தனது கை வரிசையை காட்டி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விவாதத்தை ஏற்படுத்திய டிரை கிளீனிங் தம்பதியின் வருமானம்

புதுடெல்லி, பிப்.11: சிறிய தொழில் செய்தாலும், திறம்பட செய்தால் நல்ல வருமானம் ஈட்டலாம் என்பதை உறுதிபடுத்துவது போன்ற வீடியோக்கள் அவ்வப்போது சமூக வலைதளங்களில் வைரலாவது உண்டு.

அந்த வகையில் நளினி உனாகர் என்ற பெண் தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ள ஒரு தகவல் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

நளினி உனாகரின் வீட்டுக்கு அருகே ஒரு டிரை கிளீனிங் கடைக்காரரிடம் அவரது வருமானம் குறித்து பேசும் காட்சிகளுடன் வீடியோ தொடங்குகிறது.

கடைக்காரரும், அவரது மனைவியும் மாதம் ரூ.2 லட்சத்திற்கும் அதிகமாக சம்பாதிப்பதாக கூறுகிறார்கள்.

தினமும் சுமார் 350 துணிகளை அயர்ன் செய்வதன் மூலமும், விலை உயர்ந்த புடவைகள் மற்றும் சூட்களை டிரைகிளீனிங் செய்வதன் மூலமும் ஒரு நாளைக்கு ரூ.10,500 வரை வருமானம் கிடைப்பதாக கூறுகிறார்கள்.

சொந்தக்கடை என்பதால் வாடகை கிடையாது, மின்சாரக் கட்டணம் மற்றும் ஆட்கள் கூலி போக மாதம் ரூ.2 லட்சத்து 37 ஆயிரம் வரை லாபமாக கிடைப்பதாக கூறுகிறார்கள்.

வீடியோவை பார்த்த நெட்டிசன்கள் பலரும், இந்த வருமானம் ஐ.டி. நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை விட அதிகமாக இருக்கிறது என கிண்டலாக பதிவிட்டனர்.

அதேநேரம் சிலர், இதுபோன்று வருமானம் ஈட்டுபவர்கள் முறையாக வருமான வரி செலுத்துவதில்லை என பதிவிட்டுள்ளனர்.

இவ்வாறு பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்ட நிலையில் நளினி உனாகரின் இந்த வீடியோ இணையத்தில் விவாத பொருளாக மாறி உள்ளது.

தெலுங்கானாவில் மாமியாரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த மருமகன்

கர்னூல், பிப்.11: தெலுங்கானா மாநிலம் நாகர் கர்னூல் மாவட்டம் கல்வகுர்த்தி அடுத்த ரகுபதி பேட்டை சேர்ந்த பெண் ஒருவர் தனது மகளை திம்மாஜிபேட்டியை சேர்ந்த ஒருவருக்கு திருமணம் செய்து வைத்தார். திருமணத்திற்கு பிறகு அவரது மருமகன் மதுபோதைக்கு அடிமையாகி அவரது மகளை துன்புறுத்தி வந்தார். இதனால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

இளம்பெண் கணவரை பிரிந்து விட்டு உறவினர் வீட்டிற்கு சென்று விட்டார். மனைவி தன்னை விட்டுப் பிரிந்து சென்றதற்கு மாமியார் தான் காரணம் என வாலிபர் எண்ணினார். நேற்று முன்தினம் இரவு மாமியார் தனியாக வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தார். மாமியார் வீட்டுக்கு சென்ற மருமகன் அவரை வன்கொடுமை செய்து கொடூரமாக அடித்து கொலை செய்து விட்டு தப்பி சென்றார்.

நேற்று காலை ரத்த வெள்ளத்தில் பெண் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் இதுகுறித்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

இறந்து போனவரின் 2-வது மகள் இதுகுறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து இறந்தவரின் பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கல்வகுர்த்தி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக உள்ள வாலிபரை தேடிப் பார்க்கின்றனர்.

சபரிமலை தங்கம் திருட்டு விவகாரம்: ஜெயராம் 17-ந்தேதி விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத்துறை உத்தரவு

திருவனந்தபுரம், பிப்.11: சபரிமலை ஐயப்பன் கோவிலில் உள்ள துவார பாலகர் சிலையில் பூசப்பட்ட தங்க முலாம்களை சுத்தப்படுத்தி மீண்டும் பொருத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காக அந்த சிலைகள் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டு சுத்தப்படுத்தும் பணி முடிந்து மீண்டும் சபரிமலை கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் பணியின்போது துவாரபாலகர் சிலையில் உள்ள தங்கம் திருடப்பட்டதாக புகார் எழுந்தது. கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழுவை (எஸ்.ஐ.டி.) கேரள ஐகோர்ட்டு நியமித்தது.

இந்தக் குழுவினர் தீவிர விசாரணை நடத்தி துவார பாலகர் சிலைகளை முலாம் பூச எடுத்துச் சென்ற உன்னி கிருஷ்ணன் போற்றியை கைது செய்தனர். அவர் கொடுத்த தகவலின் பேரில் கர்நாடகாவை சேர்ந்த நகை வியாபாரி கோவர்த்தன் மற்றும் சபரிமலை கோவில் தேவசம்போர்டு முன்னாள் நிர்வாகிகள் உள்பட பலரை கைது செய்தது. இதற்கிடையில் தங்கமுலாம் பூசப்பட்ட பிறகு துவாரபாலகர் சிலைகள், சென்னையில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்ட தகவல் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு கிடைத்தது. இது தொடர்பான படங்களும் வெளிவந்தன. இதனை தொடர்ந்து நடிகர் ஜெயராமுக்கு தங்கம் கடத்தல் சம்பவத்தில் தொடர்பு இருக்கலாமா? என்ற சந்தேகம் எழுந்தது.

இது தொடர்பாக விளக்கம் அளித்த நடிகர் ஜெயராம், உனனிகிருஷ்ணன் போற்றியை எனக்கு தெரியும். கோவில் தங்க நகைகளை வீட்டிற்கு கொண்டு வந்தது உண்மை தான். அதனை வீட்டில் வைத்து பூஜை செய்தால், செழிப்பை தரும் என்று உன்னி கிருஷ்ணன் போற்றி கூறியதால், தனது வீட்டில் வைத்து பூஜை செய்ததாகவும், கோவிலில் நடைபெற்ற பூஜையிலும் தான் பங்கேற்றதாகவும் தெரிவித்தார். மேலும் உன்னியிடம் இருந்து நான் ஒரு ரூபாய் கூட வாங்கவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழு நோட்டீசு அனுப்பியிருந்தது. தொடர்ந்து 2 வாரங்களுக்கு முன்பு அந்த குழுவினர், சென்னையில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் பெற்றது. அப்போது ஜெயராம், ஏற்கனவே தான் தெரிவித்திருந்ததை அவர்களிடம் தெரிவித்தாராம்.

இந்த நிலையில் தங்கம் திருட்டு விவகாரத்தில் கள்ள பணம் மோசடி நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் அமலாக்கத்துறையினர் விசாரணையில் இறங்கி உள்ளனர். சென்னையில் துவார பாலகர் சிலையை தங்க முலாம் பூச கொண்டு செல்லப்பட்ட நிறுவனம் மற்றும் கைது செய்யப்பட்ட திருவிதாங்கூர் தேவசம்போர்டு முன்னாள் நிர்வாகிகள் வீடுகள் போன்ற பல இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் ஒரே நேரத்தில் அதிரடி சோதனையிலும் ஈடுபட்டனர். இதனால் தங்கம் திருட்டு வழக்கு விறுவிறுப்பான கட்டத்தை எட்டியது.

இந்த நிலையில் நடிகர் ஜெயராமிடம் விசாரணை நடத்த அமலாக்கத்துறை முடிவு செய்துள்ளது. இதை தொடர்ந்து அவருக்கு நோட்டீசு அனுப்பி உள்ளது. அடுத்த செவ்வாய்க்கிழமை (17-ந் தேதி) அமலாக்கத்துறை முன்பு ஆஜராகும்படி அதில் கூறப்பட்டுள்ளது. தங்கம் திருட்டு வழக்கில் சிறப்பு புலனாய்வு துறையை தொடர்ந்து அமலாக்கத்துறையும் நடிகர் ஜெயராமுக்கு நோட்டீசு அனுப்பி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சூழலில் தங்கம் திருட்டு வழக்கில் தனது விசாரணை அறிக்கையை கேரள ஐகோர்ட்டில் சிறப்பு புலனாய்வு குழு தாக்கல் செய்துள்ளது. அதில், மேலும் 3 பேருக்கு வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் சபரிமலையில் தங்கம் திருடப்பட்டது என்பதை விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உறுதி செய்த போதும், எவ்வளவு தங்கம் திருடப்பட்டது? இப்போது இருப்பது ஒரிஜினல் தங்கம் தானா? என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் சபரிமலை கோவிலில் மீண்டும் ஆய்வு நடத்த சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு கேரள ஐகோர்ட்டு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் சபரிமலையில் கடந்த 2017-ம் ஆண்டு புதிய கொடிமரம் அமைக்கப்பட்டதிலும் முறைகேடு நடந்திருப்பதாக திருவிதாங்கூர் தேவசம்போர்டு விஜிலன்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பழைய கொடிமரத்திற்கு சேதம் ஏற்பட்டதாக கூறி புதிய கொடிமரம் அமைக்க முடிவு செய்யபட்டதாக கூறப்படுகிறது. ஆனால் பழைய கொடி மரத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை கேரள ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை பரிசீலித்த ஐகோர்ட்டு, புதிய கொடிமரம் அமைக்கப்பட்டது குறித்து விரிவான விசாரணை நடத்த விஜிலன்சு துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதில் முறைகேடு நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அதுபற்றியும் சிறப்பு புலனாய்வுக் குழு கூடுதல் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐகோர்ட்டு தெரிவித்துள்ளது.

டிஜிபி அலுவலக பெண் அதிகாரி வீட்டில் ரூ.8 கோடி மதிப்புள்ள நகை திருடிய நபர் கைது

சென்னை, பிப்.11: தரமணி கானகம், பிள்ளையார் கோயில் தெருவில் வசித்து வருபவர் ஜெயப்பிரதா (45). டிஜிபி அலுவலக நிர்வாகப் பிரிவில் (புலனாய்வு மற்றும் உளவுப் பிரிவான எஸ்பிசிஐடி) அதிகாரியாக உள்ளார்.

கடந்த 23-ம் தேதி காலை ஐ.டி. ஊழியரான கணவர் வேலைக்கும், மகன் கல்லூரிக்கும் சென்ற நிலையில், வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்று மாலை வீடு திரும்பியபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் பீரோவில் வைத்திருந்த 69 பவுன் (சுமார் ரூ.8 கோடி) எடை கொண்ட 12 தங்க செயின்கள், 3 ஆரம் மற்றும் 3 ஜோடி கம்மல்கள் திருடுபோயிருந்தது தெரிந்தது.

இது தொடர்பாக தரமணி காவல் நிலையத்தில் ஜெயப்பிரதா புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர்.

இதில், ஜெயபிரதா வீட்டில் திருட்டில் ஈடுபட்டது சென்னை ஆர்.ஏ.புரம், கோவிந்தசாமி நகரைச் சேர்ந்த ஆனந்த் (50) என்பது தெரிந்தது. இதையடுத்து தலைமறைவாக இருந்த அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில் ஆனந்த், திருவான்மியூர் பகுதியிலும் பூட்டியிருந்த வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து தப்பியதும் தெரிந்தது. இவரிடமிருந்து 54 பவுன் தங்க நகைகள், ரூ.7.5 லட்சம் மற்றும் செல்போன், பைக் பறிமுதல் செய்யப்பட்டன.

மாற்றுத் திறனாளி காணாமல் போன வழக்கில் திடீர் திருப்பம்: கொலை செய்து கழிவுநீர் தொட்டியில் வீசப்பட்டது அம்பலம்

சென்னை, பிப்.11: 2 மாதங்களுக்கு முன்பு காணாமல் போன மாற்றுத் திறனாளி வழக்கில் திடீர் திருப்பமாக அவர் கொலை செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மகேந்திரன் (26). வாய் பேச முடியாத, காது கேளாத மாற்றுத் திறனாளி. இவர் சென்னை புழல் கேம்ப் பகுதியில் தங்கி மாதவரத்தில் உள்ள பிரபல ஜவுளிக் கடைகிடங்கில் சுமை தூக்கும் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

கடந்த டிச.26 முதல் இவர் மாயமானார். இது தொடர்பாக புழல் காவல் நிலையத்தில் உறவினர்கள் புகார் அளித்தனர். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து தேடி வந்தனர். முதல் கட்டமாக மகேந்திரனுடன் வேலை செய்து வந்த திருவள்ளூர் மாவட்டம், புட்லூரை சேர்ந்த லாரன்ஸ் (45) என்பவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதில் போலீஸாருக்கு எந்த துப்பும் கிடைக்கவில்லை. இந்நிலையில், மாயமான மகேந்திரனின் செல்போன் திருவள்ளூர் மாவட்டம், புட்லூரில் செயல்பாட்டில் இருப்பது போலீஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து புழல் போலீஸார் அங்கு சென்று மற்றொரு மாற்றுத் திறனாளியான (காது கேளாத வாய் பேச முடியாதவர்) வைத்தியநாதன்(40) என்பவரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்துச் சென்று, சைகை மொழியில் பேசத் தெரிந்தவர் துணையுடன் விசாரித்தனர்.

அப்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. கொலைக்கான காரணம் கொலை செய்யப்பட்ட மகேந்திரன், கைது செய்யப்பட்ட லாரன்ஸ் இருவரும் ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்ததால்நண்பர்களாகி உள்ளனர்.

அடிக்கடி ஒன்றாகச் சேர்ந்து மது அருந்தியுள்ளனர். மேலும் லாரன்ஸ் வீட்டுக்கு மகேந்திரன் அடிக்கடி சென்று வந்துள்ளார். அப்போது லாரன்ஸின் மாற்றுத் திறனாளி மனைவியுடன் மகேந்திரனுக்கு பழக்கம் ஏற்பட்டு இருவரும் நெருங்கியுள்ளனர்.

இதையறிந்த கணவரான லாரன்ஸ், மனைவியைக் கண்டித்துள்ளார். ஆனால் அவர் கேட்கவில்லையாம். இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் லாரன்ஸ் மனைவி அவரைப் பிரிந்து மகேந்திரனுடன் புழலில் வீடு எடுத்து தனிக்குடித்தனம் நடத்தினாராம்.

இதனால் ஆத்திரமடைந்த லாரன்ஸ் தன் மனைவியை அபகரித்துச் சென்ற மகேந்திரனை பழிவாங்கத் திட்டம் தீட்டியுள்ளார். இதற்கிடையே மகேந்திரன் தனது மாற்றுத் திறனாளி அடையாள அட்டையை திருநெல்வேலி முகவரியிலிருந்து சென்னைக்கு மாற்ற முயற்சி மேற்கொண்டார். இதற்கு உதவுவதாக லாரன்ஸ் தானாக முன் வந்துள்ளார். மேலும், இருவரும் சமாதானமாகி விடுவோம் என நடித்துள்ளார். இதை மகேந்திரன் உண்மை என நம்பியுள்ளார்.

சம்பவத்தன்று தனது வீட்டுக்கு வரும்படி மகேந்திரனை, லாரன்ஸ் அழைத்துள்ளார். அங்கு, இருவரும் மது அருந்தி உள்ளனர். கூடவே லாரன்ஸின் நண்பர் வைத்தியநாதன் என்பவரும் சேர்ந்து மது அருந்தியுள்ளார். அப்போது லாரன்ஸ், வைத்தியநாதன் இருவரும் சேர்த்து மகேந்திரனை தாக்கி, கழுத்தை நெரித்து கொலை செய்து சடலத்தை வீட்டுக்குப் பின்புறம் உள்ள செப்டிக் டேங்கில் போட்டு மூடியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலமாக அளித்ததாக போலீஸார் தெரிவித்தனர். மகேந்திரனின் செல்போனை வைத்தியநாதன் எடுத்துச் சென்று 2 மாதங்களுக்குப் பிறகு தற்போது பயன்படுத்தத் தொடங்கியதால் இந்த கொலைச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மகேந்திரனின் உடல் மீட்கப்பட்டது.

மக்காச்சோளம் கொள்முதலை உடனடியாக தொடங்க வேண்டும்: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

சென்னை, பிப்.11: மக்காச்சோளம் கொள்முதலை தமிழக அரசு உடனடியாக தொடங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி கூறியதாவது: பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர், தென்காசி, தருமபுரி மற்றும் கோடை சாகுபடியாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் மக்காச்சோளம் சாகுபடி பெரும் அளவு செய்யப்படுகிறது.

தற்போது அறுவடை தொடங்கியுள்ள நிலையில் இதன் விலை குவிண்டால் ரூ.1,600 அளவில் தான் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் மக்காச்சோளம் சாகுபடிக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்யப்படுகிறது, ஓரளவுமுறையான உற்பத்தி என்றால் ஏக்கருக்கு சராசரி 15 குவிண்டால் மகசூல் கிடைக்கும்.

ஆனால் தீவிர பருவ மழை, உரிய மழையின்மை, நோய் பாதிப்பு போன்ற காரணங்களால் அதிகபட்சம் ஏழு முதல் ஒன்பது குவிண்டால் மட்டுமே தற்போது சோளம் மகசூல் கிடைக்கிறது.

தற்போது சந்தை விலை ஒரு குவிண்டாலுக்கு சராசரி ரூ.1,600 அளவில் உள்ளது. ஆக ஏக்கர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் அளவில் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ரூ.3,545 என அரசு அறிவித்துள்ளது. அதில் சரிபாதி தான் தற்போது கிடைக்கிறது. வியாபாரிகள் மட்டுமே கொள்முதல் செய்து வரும் நிலையில் இந்த விலை இழப்பை விவசாயிகள் சந்திக்கின்றனர்.

மத்திய அரசு விலையை நிர்ணயித்தால் மட்டும் போதாது. இந்த நெருக்கடியான நிலையில் அரசே மாவட்டங்களில் மக்காச்சோளம் கொள்முதலை உடனடியாக தொடங்க வேண்டும். அரசின் கொள்முதல் மேற்கொள்வதற்கான கட்டமைப்பும், வேளாண் துறையின் மார்க்கெட்டிங் கமிட்டியும் இருக்கிறது.

இதை பயன்படுத்தி விவசாயிகளை பாதுகாக்க அண்டை மாநிலங்களைப் போல இழப்பீட்டு மானியம் வழங்கி ஈடு செய்து விவசாயிகளை காத்திட அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு: அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்

சென்னை, பிப்.11: கடந்த 5 ஆண்டுகளில் 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2.56 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கூறினார்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்கவும், தமிழகத்தை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கவும், மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது.

இதில், தொழிலாளார் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் கலந்துகொண்டு கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் முன்னிலையில் அரசு அதிகாரிகள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்றனர். தொடர்ந்து அமைச்சர் கணேசன் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகளில், 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.2.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், பல்வேறு துறைகளின் வாயிலாக நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

2030-ம் ஆண்டுக்குள் தமிழகத்தை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அனைவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாக பணியாற்றிய சார்-ஆட்சியர்கள் மற்றும் கோட்டாட்சியர்களுக்கு கேடயமும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த கூட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலர் வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செ.ஆனந்த், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தீ விபத்து ஏற்பட்டால் விரைந்து அணைக்கும் முறை: தமிழகம் முழுவதும் தனியார் காவலர்களுக்கு பயிற்சி

சென்னை, பிப்.11: தீ விபத்து ஏற்பட்டால் விரைந்து அணைப்பது எப்படி என தமிழகம் முழுவதும் தனியார் காவலர்களுக்கு தீயணைப்பு துறையினர் பயிற்சி அளித்தனர்.

தீ விபத்து ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது, தீ விபத்து ஏற்பட்டால் தீயணைப்பு வீரர்கள் விபத்து இடத்துக்கு வருவதற்குள் தீயை கட்டுக்குள் கொண்டு வருவது எப்படி என குடியிருப்புகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், திரையரங்கம், வணிக வளாகங்கள், பள்ளிகள் போன்றவற்றில் பணிபுரியும் தனியார் காவலர்களுக்கு தீ பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி தமிழகம் முழுவதும் பிப்.9-ம் தேதி நடத்தப்படும் என தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அறிவித்தது.

அதன்படி, சென்னை அசோக் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற இப்பயிற்சியை தீயணைப்புத் துறை இயக்குநரும், டிஜிபியுமான சீமா அகர்வால் தொடங்கி வைத்தார். இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள 375 தீயணைப்பு நிலையங்களிலும் இந்த பயிற்சி நடைபெற்றது. சென்னையில் 1,500 பேர் உட்பட தமிழகம் முழுவதும் 5 ஆயிரம் பேருக்கு தீ விபத்து ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது எப்படி, தீ விபத்து நடைபெற்றால் அதை விரைந்து அணைப்பது எப்படி என தீயணைப்பு வீரர்கள் பயிற்சி அளித்தனர். இன்றும் இந்த பயிற்சி நடைபெறுகிறது.

முன்னாள் கூடுதல் டிஜிபி டி.ராதாகிருஷ்ணன் காலமானார்: முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, பிப்.11: தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்தவர் டி. ராதாகிருஷ்ணன் (73). இவர் கடந்த 1981-ல் தமிழக கேடரில் ஐபிஎஸ் ஆனார். மதுரை காவல் ஆணையர், சென்னை இணை ஆணையர் உட்பட பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார். பின்னர் கூடுதல் டிஜிபியாக பணி ஓய்வு பெற்று சென்னையை அடுத்த பனையூரில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இந்நிலையில், அவர் உடல் நலக்குறைவால் நேற்று காலமானார். அவரது உடலுக்கு குடும்பத்தினர், நண்பர்கள், போலீஸ் அதிகாரிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் பெசன்ட் நகர் மின் மயானத்தில் இன்று எரியூட்டப்படுகிறது.

முதல்வர் இரங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், டி.ராதாகிருஷ்ணன் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன். நான் சென்னை மேயராக இருந்த காலத்தில் சென்னை காவல் இணை ஆணையராக பணியாற்றினார்.

பல்வேறு பொறுப்புகளில் சட்டம்-ஒழுங்கை திறம்பட கையாண்டிருக்கிறார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், காவல் துறை நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ: இன்று இறுதி ஆய்வு!

சென்னை, பிப்.11: பூந்தமல்லி - வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவை இயக்குவதற்கு இன்று இறுதி ஆய்வு நடத்தப்படவுள்ளது.

சென்னையில் 2-ஆம் கட்ட மெட்ரோ திட்டத்தில் மெரீனா கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி சுற்றுச்சாலை வரையிலான வழித்தடம் 26 கி.மீ. தொலைவுக்கு அமையவுள்ளது.

ஏற்கெனவே முதல்கட்ட மெட்ரோ திட்டத்தில் வடபழனி இணைக்கப்பட்ட நிலையில், 2-ஆம் கட்டத்தில் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலான 3-ஆவது வழித்தடமானது வடபழனி மெட்ரோவைக் கடந்து பூந்தமல்லி செல்லும் வகையில் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

அதில், வடபழனி முதல் பூந்தமல்லி வரையிலான 16 கி.மீ. தொலைவுக்கான மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுவிட்டது. ரயில் என்ஜின் சோதனையும் நடத்தப்பட்டு ரயில் பாதை வடிவமைப்புக்கான உறுதிச் சான்றும் பெறப்பட்டது.

இதனிடையே, தண்டவாளத்தின் பாதுகாப்பு உறுதித்தன்மை சோதனை செய்யப்பட்டு இந்திய ரயில்வே வாரியமும் ஒப்புதல் வழங்கி பயன்பாட்டுக்கு தயாராகவுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாகவே, பிரதமர் நரேந்திர மோடியும், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினும் இணைந்து பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவையை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ரயில் தண்டவாளத்தின் தரம், பயணிகள் பாதுகாப்பு, பெட்டிகளின் வசதிகள் உள்ளிட்டவை குறித்து நாளைமுதல் 3 நாள்களுக்கு இறுதிகட்ட ஆய்வை ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சௌத்ரி நடத்தவுள்ளார்.

பறவைக் காய்ச்சல்: ஆஃப் பாயில் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கை!

சென்னை, பிப்.11: பறவைக் காய்ச்சல் எதிரொலியாக மக்கள் கோழி இறைச்சியை முழுமையாக வேக வைத்து சாப்பிட வேண்டும் என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை அடையாறில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், ‘ஹெச் 5. என் 1’ என்ற பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, தடுப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தும்படி, தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது.

இந்தநிலையில்,சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியனிடன் பறவைக் காய்ச்சல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது அமைச்சர் பேசியதாவது:

“பறவைக் காய்ச்சல் தொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அந்த தகவல் கிடைத்ததும் காகங்கள் உள்ளிட்ட பறவை இனங்கள் திடீரென்று இறந்தால், அதனை பார்ப்பவர்கள் உடனடியாக ஆழமாக குழித்தோண்டி புதைக்க வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், திடீரென்று உயிரிழக்கும் கோழிகளை சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழி இறைச்சி சாப்பிடுபவர்கள் நன்றாக சமைத்து சாப்பிட வேண்டும். ஆஃப் பாயில் போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

தமிழகத்தில் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் நோய்த் தொற்று இதுவரை ஏற்படவில்லை. மாவட்ட அளவில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது” எனத் தெரிவித்தார்.

சென்னையில் இன்று (11.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...

சென்னை, பிப்.11: சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் இன்று (11.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

நங்கநல்லூர்: ஷீலா நகர், ஐஸ்வர்யா தெரு, ஏரிக்கரை தெரு, ராமகிருஷ்ண ராஜு நகர், நீலமேகம் தெரு, அகத்தியர் தெரு, மணிகண்டன் தெரு, அன்னை தெரசா நகர், ஏழுமலை தெரு, ஏஜிஎஸ் காலனி, பாலாஜி நகர், குப்புசாமி தெரு, கங்கை தெரு, சோக்காயில்லா தெரு, யமுனை தெரு, சிவராமன் தெரு, சதாசிவம் நகர், ராம் குமார் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

பா.ம.க விவகாரத்தில் ஆவணங்களின்படி தேர்தல் ஆணையம் முடிவெடுத்ததற்கு தடையில்லை: தில்லி உயர்நீதிமன்றம்

புது தில்லி, பிப்.11: பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவா் யாா்? என்ற உள்கட்சி விவகாரத்தில் தங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தோ்தல் ஆணையம் முடிவு எடுத்ததற்கு எந்த தடையும் இல்லை என தில்லி உயா்நீதிமன்றம் திங்கள்கிழமை கூறியது

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவா் தான்தான் என அக்கட்சியின் நிறுவனா் மருத்துவா் ராமதாஸ் ஒருபுறமும்,அவரது மகன் மருத்துவா் அன்புமணி மறுபுறமும் கூறி வருகின்றனா்.

இந்நிலையில் தோ்தல் ஆணையம் கடந்த ஆண்டு நவம்பா் 27ம் தேதி பா.ம.க நிறுவனா் ராமதாஸ் க்கு எழுதிய கடிதத்தில் கூறியதாவது:

தோ்தல் ஆணையத்தின் பதிவுகளின்படி, பட்டாளி மக்கள் கட்சியின் நிா்வாகிகளின் பதவிக்காலம் 01.08.2026 வரை செல்லுபடியாகும், மேலும் டாக்டா அன்புமணி ராமதாஸ் கட்சியின் தலைவராக உள்ளாா்.

நீங்கள் (பா.ம.க நிறுவனா் டாக்டா் எஸ்.ராமதாஸ்) கட்சியின் தலைவா் என்று கூறிக் கொண்டால், கட்சியின் நிா்வாகிகள் தொடா்பான பிரச்சினையைத் தீா்க்க பொருத்தமான கட்சி மன்றம் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறீா்கள் என தோ்தல் ஆணையம் நவம்பா் 27ம் தேதி பாமக நிறுவனா் ராமதாஸ் க்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தது.

இதையடுத்து பாமக நிறுவனரான மருத்துவா் ராமதாஸ் தில்லி உயா்நீதிமன்றத்தை நாடினாா்

அந்த வழக்கில் கடந்த ஆண்டு டிசம்பா் நான்காம் தேதி உத்தரவு பிறப்பித்த தில்லி உயா்நீதிமன்ற நீதிபதி மினி புஷ்கானா, இந்த விவகாரத்தில் சிவில் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்,தோ்தல் ஆணையம் பாமக தலைவராக யாரையும் அங்கீகரிக்க முடியாது என உத்தரவிட்டாா்

இந்நிலையில் இந்த உத்தரவில் திருத்தம் செய்யக்கோரி தோ்தல் ஆணையம் தில்லி உயா்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது

அந்த மனு நீதிபதி மினி புஷ்கானா முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது

அப்போது தோ்தல் ஆணையம் கூறியதாவது:ஒரு கட்சியிடம் இருந்து வரும் ஆவணங்கள்,கடிதங்கள் அடிப்படையில் அக்கட்சியின் தலைவா், செயலாளா் மற்றும் நிா்வாகிகள் யாா் என்பது தோ்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்படும்.அதன் பிறகு அந்த கட்சியில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடா்பாக வரும் கடிதங்கள் அடிப்படையில் அதனை தோ்தல் ஆணையம் பதிவு செய்து கொள்ளும்.

அந்த வகையில் பாமகவிற்குள் உட்கட்சி பிரச்சனை எழுவதற்கு முன்பாகவும், இவ்விவகாரம் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்பாகவும் வந்த கடிதங்களின் அடிப்படையில் பட்டாளி மக்கள் கட்சியின் நிா்வாகிகளின் பதவிக்காலம் 01.08.2026 வரை செல்லுபடியாகும், மேலும் டாக்டா அன்புமணி ராமதாஸ் கட்சியின் தலைவராக உள்ளாா் என தோ்தல் ஆணையம் அங்கீகரித்தது

தோ்தல் ஆணையத்திடம் உள்ள ஆவணங்களின்படி அவ்வாறு பதிவு செய்ய சட்டத்தில் இடம் உள்ளது இதனை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் பதிவு செய்து திருத்தம் செய்ய வேண்டும் என தோ்தல் ஆணையம் வாதிட்டது

அதற்கு நீதிபதி மினி புஷ்கானா, நீங்கள் உங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தால் அதனை நான் தடுக்கவில்லை.

உங்களிடம் உள்ள பதிவுகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நீங்கள் தாராளமாக முடிவெடுக்கலாம் அதற்கு எந்த தடையும் இல்லை என தெரிவித்தாா

இதையடுத்து தோ்தல் ஆணையத்தின் வாதம் பதிவு செய்து கொள்ளப்படுவதாக கூறி வழக்கினை நீதிபதி மினி புஷ்கானா முடித்து வைத்தாா். தோ்தல் ஆணையத்திற்கு ஆட்சேபம் தெரிவித்த பா.ம.க நிறுவனா் மருத்துவா் ராமதாஸ் தரப்பு வாதத்தையும் தில்லி உயா்நீதிமன்றம் பதிவு செய்துகொண்டது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்பட 14 மாவட்டங்களில் பிப். 13 வரை பனி மூட்டம்

சென்னை, பிப்.11: தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை (பிப். 10) முதல் பிப். 13-ஆம் தேதி வரை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்பட 14 மாவட்டங்களில் பனி மூட்டம் நிலவும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

குமரிக்கடல் மற்றும் அதையொட்டிய பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், செவ்வாய்க்கிழமை (பிப். 10) முதல் பிப்.15-ஆம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வட வானிலை நிலவக்கூடும். பிப்.10 முதல் 13-ஆம் தேதி வரை வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நீலகிரி, தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலையில் மிதமான பனிமூட்டமும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சேலம், ஈரோடு, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலையில் லேசான பனிமூட்டமும் நிலவும்.

சென்னை மற்றும் புகா் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை வானம் தெளிவாகவும், அதன் பிறகு ஓரளவு மேகமூட்டத்துடனும் காணப்படும். அதிகாலையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் ஆட்டோ, கால்டாக்சி டிரைவர்கள் வேலை நிறுத்தம்

சென்னை, பிப்.11: தமிழ்நாடு ஆட்டோ-கால் டாக்சி ஓட்டுனர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வேலை நிறுத்த போராட்டம் இன்று நடைபெற்றது.

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்த வேண்டும், டூரிஸ்ட் கேப் , மேக்ஸி கேப் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஜிபிஎஸ் கருவியை அரசு செலவில் பொருத்த வேண்டும், ஓலா, உபர், ராபிடோ, போர்ட்டர் போன்ற வாகனங்களை அக்ரிகேட்டர் சட்டத்தின் கீழ் முறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தம் நடந்தது.

சென்னையில் 30 ஆயிரம் பேர் இந்த வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து கூட்டமைப்பு சங்கங்களின் தலைவர் ஜாகிர் உசேன் கூறியதாவது:-

13 ஆண்டுகளாக மீட்டர் கட்டணத்தை உயர்த்தாமல் அரசு கிடப்பில் போட்டுள்ளது. இதனால் ஆட்டோ தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. 2013-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மாற்றி அமைக்காமல் இருப்பது வேதனையானது.

எனவே கட்டணத்தை மாற்றி புதிய கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வாகனங்களை முறைப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் பிரதான கோரிக்கையாகும்.

இவற்றை உடனடியாக இந்த அரசு செய்ய வேண்டும் என வலியுறுத்தி பொது வேலை நிறுத்தம் நடக்கிறது. மாலை 4 மணி அளவில் கிண்டியில் உள்ள போக்குவரத்து ஆணையர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டம் நடக்கிறது. இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொள்கிறார்கள் என்றார்.

ஆளுநர் கான்வாயில் பைக்கில் நுழைந்த 2 பேர் கைது

சென்னை, பிப்.11: தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி திருவான்மியூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார். பின்னர் அங்கிருந்து கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு காரில் புறப்பட்டுச் சென்றார்.

அவரது காருக்கு முன்னும், பின்னும் காவல் துறையின் பாதுகாப்பு வாகனங்கள் சென்றன. அவரது கார், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அருகே செல்லும் போது பைக் ஒன்று திடீரென அத்துமீறி நுழைந்து ஆளுநர் காரை பின் தொடர்ந்து சென்றது. ஆளுநருக்கு பாதுகாப்புக்காக சென்ற காவல் துறை வாகனங்களையும் முந்திச் சென்றது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த போலீஸார், அவர்கள் இருவரையும் பிடிக்க முயன்றனர்.

ஆனால் இருவரும் பைக்கில் வேகமாக சென்றதால், போலீஸாரால் பிடிக்க முடியவில்லை. இதையடுத்து போலீஸார் ஆளுநர் மாளிகை முன் நின்று கொண்டிருந்த போலீஸாருக்கு வாக்கி டாக்கி மூலம் தகவல் கொடுத்து அந்த பைக்குகளை பிடிக்க உத்தரவிட்டனர். அதன்படி அத்துமீறிய இருவரையும் போலீஸார் பிடித்து, கிண்டி காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் அவர்கள் கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த அன்புராஜ் (22), விழுப்புரத்தைச் சேர்ந்த ஜீவா (22) என்பதும், இருவரும் பெருங்களத்தூர் பகுதியில் தங்கியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதும், விடுமுறை தினம் என்பதால் அடையாறுக்கு வந்ததும், அங்கிருந்து மது அருந்திவிட்டு பெருங்களத்தூருக்கு புறப்பட்டதும் தெரியவந்தது.

மேலும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை பகுதியில் நடைபெற்ற வாகன சோதனையில் போலீஸாரிடம் பிடிபடாமல் இருப்பதற்காக ஆளுநர் வாகன அணிவகுப்புக்குள் அத்துமீறி நுழைந்திருப்பதும், ஆளுநர் வாகன அணிவகுப்புக்குள் சுமார் அரை கிலோ மீட்டர் பயணித்திருப்பதும் தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் இருவரையும் கைது செய்தனர்.

TNPSC தேர்வுகளைக் கூட நடத்த தெரியாதவர், தமிழக முதல்வராக வாய்த்திருப்பது சாபக்கேடு - இ.பி.எஸ்.

சென்னை, பிப்.11: அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் பள்ளி வளாகத்தில் புகுந்த விஷப்பாம்பு கடித்ததில் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் , நாமக்கல் மாவட்டம் குமாரமங்கலத்தில் அரசுப்பள்ளியில் விஷப்பூச்சி கடித்து 3-ம் வகுப்பு மாணவி உயிரிழந்ததாகவும், வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

அம்மாணவர்களின் தாய், தந்தையர்க்கும் குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திமுக ஆட்சியில், அடிப்படைக் கட்டமைப்போ, சுகாதாரமோ கூட இல்லாத அரசுப்பள்ளிகளின் அவல நிலையால், மாணவர்கள் உயிர் போகும் அளவு சம்பவங்கள் நிகழ்வது என்பது கொடுமையின் உச்சம்.

மேற்கூரை இடிந்து விழுந்து விடுமோ?

சுவர் தன் மீது விழுந்துவிடுமோ?

தரமற்ற உணவால் பாதிப்பு வருமோ?

போன்ற அச்சங்களுக்கு நடுவே தான் மாணவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு செல்லவேண்டி இருக்கிறது.

இதற்கு நடுவே, கள்ளகுறிச்சி, ரிஷிவந்தியம் அருகே உள்ள கீழத்தேனூர் அரசுப்பள்ளியில் உயர்நிலை நீர்தேக்கத் தொட்டியை மாணவர்களை வைத்து சுத்தம் செய்ததாக வருகின்ற செய்தி மேலும் அதிர்ச்சி அளிக்கின்றது...

இதற்கு கூட ஆட்கள் நியமிக்க வக்கற்ற நிலையில் தான் பள்ளிக்கல்வித்துறை இருக்கிறதா?

அரசுப்பள்ளிக்கு மாணவர்கள் படிக்க வந்தார்களா? அல்லது, உங்களுக்கு வேலை செய்ய வந்தார்களா?

மாணவர்களின் பாதுகாப்பை Compromise செய்து இப்படிப்பட்ட ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவது குற்றம் என்பதை இந்த விடியா திமுக அரசு உணருமா?

இந்த நிலைக்கு அரசுப்பள்ளிகளைத் தள்ளிவிட்ட திமுக அரசு, “கல்வியிற் சிறந்த தமிழ்நாடு” என ஆடம்பர மேடை அமைத்து, போலியான சுய விளம்பரம் செய்துகொள்வது வெட்கக்கேடானது.

பள்ளிகளின் பராமரிப்பை, சுகாதாரத்தை உறுதிசெய்ய வேண்டிய தனது தலையாய பணியை தூக்கி எறிந்துவிட்டு, ரீல்ஸ் எடுப்பது, கார் ஓட்டுவது, வாக்கிங் போவது என போட்டோஷூட் எடுப்பது மட்டுமே இருக்கும் ஒருவர், Group II போன்ற அதிமுக்கிய தேர்வுகளைக் கூட முறையாக நடத்த தெரியாதவர், தமிழ்நாட்டுக்கு முதல்வராக வாய்த்திருப்பது சாபக்கேடு.

விஷப் பூச்சி, பாம்புக் கடியால் உயிரிழந்த பள்ளி மாணவர்களின் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் உடனடியாக வழங்கிட வலியுறுத்துகிறேன்.

பா.ஜ.க ஆக்டோபஸ் மாதிரி எல்லா கட்சிகளையும் விழுங்கி இருக்கிறது- செல்வப்பெருந்தகை

ஆலந்தூர், பிப்.11: சென்னை விமான நிலையத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழக காங்கிரஸ் கட்சியில் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர்கள் அறிமுக கூட்டமும் பயிற்சி முகாமும் டெல்லியில் நடக்கிறது. கூட்டணி பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கிறது.கூட்டணியில் இழுபறி எதுவும் கிடையாது. பேசிக் கொண்டு இருக்கிறோம்.

தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி பற்றி எடப்பாடி பழனிசாமிக்கு என்ன கவலை இருக்கிறது. அ.தி.மு.க. கட்சியை விட்டு விடாமல் பத்திரமாக பார்த்துக் கொள்ள சொல்லுங்கள். பா.ஜ.க ஆக்டோபஸ் மாதிரி எல்லா கட்சிகளையும் விழுங்கி இருக்கிறது. அடுத்து விழுங்க போக இருக்கிற கட்சி அ.தி.மு.க. தான். அ.தி.மு.க.வை முக்கால் வாசி விழுங்கி விட்டது. இன்னும் கொஞ்சம் இருக்கும் கட்சியை விட்டு விடாமல். எடப்பாடி பழ்னிச்சாமி பாதுகாப்பாக வைத்து கொள்வதே பெரிய விசயம்.

அ.தி.மு.க. கூட்டணி மேடை ஏறிவிட்டார்கள் என்கிறீர்கள். கார்ல் மாக்ஸ் சிலை திறப்பு விழாவில் தி.மு.க. கூட்டணி தலைவர்களும் கைகோர்ந்து இருந்தோம். 18-ந் தேதி எல்லாரும் சேர்ந்து மத்திய பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்த உள்ளோம். எல்லாரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.

பா.ம.க.வை சேர்ப்பது குறித்து முதலமைச்சர் தான் முடிவு செய்வார். பிற கட்சிகளின் பிரச்சினைகளில் காங்கிரஸ் மூக்கை நுழைக்காது. இதை தவறாக பதிவு செய்து உள்ளனர். ஆனால் அதுபோல் எதுவும் சொல்லவில்லை. கூட்டணிக்கு தமிழ்நாடு தலைவராக உள்ள முதலமைச்சர் தான் முடிவு எடுப்பார்.

நாடாளுமன்றத்தில் தான் ஜனநாயகம் பிறக்கிறது. நாடாளுமன்றத்தில் விவாதங்கள் செய்ய அனுமதிக்க வேண்டும். பேசவிட மாட்டோம் என்பது சர்வாதிகாரம். நாடாளுமன்ற பேரவை தலைவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தை தந்து உள்ளனர்.100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு ஆதரவாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.கூட்டணிக்காக அதிகாரத்தை காங்கிரஸ் கட்சி மேலிடத்திற்கு தந்து உள்ளோம். கட்சி மேலிடம் பேசி கொண்டு இருக்கிறது. கொஞ்சம் பொறுத்திருங்க்ள்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகத்தில் காணொலி மூலம் சாட்சி விசாரணைக்கு வரவேற்பு!

சென்னை, பிப்.11: தமிழகத்தில் காணொலி மூலம் சாட்சி விசாரணை மேற்கொள்ளும் நடைமுறை முதல்முறையாக அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியை காவல் துறையினர் வரவேற்றனர்.

தமிழக காவல் துறையிடம் பொதுமக்கள் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் புகார்கள் அளிக்கின்றனர். அதன்பேரில் முகாந்திரத்தின் அடிப்படையில் சுமார் 5 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. சிறு குற்ற வழக்குகள், நீதிமன்றங்களால் உடனடியாகத் தீர்க்கப்படுகின்றன. குடும்பங்களுக்கு இடையிலான தகராறு தொடர்பான வழக்குகள், உணர்ச்சிவசப்பட்டு நிகழும் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் சில மாதங்களில் சமரசம் காணப்பட்டு திரும்பப் பெறப்படுகின்றன.

இருப்பினும் இதுபோன்ற வழக்குகள், காவல் துறையின் பணிச் சுமை, சாட்சிகளையும், தடயங்களையும் ஆஜர்படுத்துவதில் ஏற்படும் தாமதம், நீதித் துறையில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களால் ஏற்படும் தாமதம் போன்றவற்றால் வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில் மட்டும் சுமார் 7 லட்சம் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் குற்ற வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்தி, குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் சட்டப்படி தண்டனை பெற்றுக் கொடுப்பதில் தமிழக காவல் துறை அண்மைக்காலமாக தீவிரம் காட்டி வருகிறது.

காணொலி விசாரணை

சாட்சி விசாரணையை காணொலிக் காட்சி மூலம் நடத்தலாம் என தமிழக உள்துறை அண்மையில் உத்தரவிட்டது. காணொலி மூலம் சாட்சிகளை விசாரிக்க பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் -2023 பிரிவு 265, 266 சட்டபூர்வ அனுமதி வழங்குகிறது. இதனடிப்படையில் தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ்குமார் பிறப்பித்த உத்தரவின்படி, தமிழக காவல் துறையில் மாநிலம் முழுவதும் உள்ள நகர காவல் ஆணையர் அலுவலகம், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், அனைத்து அரசு மருத்துவமனைகள், மத்திய சிறைகள், மாவட்ட சிறைகள், கிளைச் சிறைகள், தடயவியல் துறை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையர் அலுவலகங்கள், தலைமைச் செயலகத்தில் இருக்கும் அரசு செயலர்கள், ஆணையர் அலுவலகங்கள் ஆகியவை காணொலி மூலம் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகும் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் 2004-ஆம் ஆண்டு முதல் சிறைகளில் இருக்கும் கைதிகளை காணொலி மூலம் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தும் முறை அமலில் உள்ளது. இந்த நடவடிக்கையால் காவல் துறையினரின் பணிச் சுமை வெகுவாகக் குறைந்தது. மேலும், நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் கைதிகள் தப்பியோடும் சம்பவம், கைதிகள் மீதான தாக்குதல் தூக்குதல் நிகழ்வுகள், சிறைக்குள் சட்ட விரோத பொருள்களைக் கடத்துவது உள்ளிட்ட குற்றங்கள் பெருமளவு குறைந்தன.

இதேபோல 2018-ஆம் ஆண்டு முதல் வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்பந்தப்பட்டவர்களின் கைப்பேசிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அழைப்பாணை அனுப்பப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டது. இதனால் நீதிமன்ற அழைப்பாணை உத்தரவுடன் சம்பந்தப்பட்டவர்களை காவல் துறையினர் தேடி அலையும் நேரம் குறைந்தது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com